



யாழ்ப்பாணம் – பண்ணாகம்

சொல்வேந்தன், கலைவாரிதி

# பண்டிதர் திரு. ப. இராசகுரு

(பிரசித்த நொத்தாரிசு)

அவர்களின்

நீங்கா நினைவாக வெளியிட்ட

# இராஜ மல்லிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18–05–2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் – பண்ணாகத்தைப்
பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும்
உயர் சைவ வேளாண் குல மரபில் தோன்றியவரும்
அமரர்களான பரமகுரு இராசம்மா தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரனுமாகிய

*சொல்வேந்தன், கலைவாரிதி*

## பண்டிதர் திரு. ப. இராசகுரு

(பிரசித்த நொத்தாரிசு)

அவர்களின்

*நீங்கா நினைவாக வெளியிடப் பெற்ற*

# இராஜ மல்லிகை

18-05-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

மேன்மை மிகு நற்பண்புகளின் நிலைக்களனாய் விளங்கி
அன்பு கருணை என்பவற்றின் மொத்த வடிவாகி
அரசியல் துறையிலும், இலக்கியத் துறையிலும்,
சட்டத்துறையிலும், ஆன்மீகத்துறையிலும்
தனக்கென தனி முத்திரை பதித்த
தனக்கென மட்டும் வாழாது தன் இனத்தின் விடிவிற்காகவும்
இதய சுத்தியுடன் தன்னை அர்ப்பணித்து செயலாற்றிய
கர்மவீரன் கலைவாரிதி, சொல்வேந்தன், தமிழ் பண்டிதர்
என்றெல்லாம் போற்றப்பட்ட எங்கள் வாழ்வின்
ஒளி விளக்காக விளங்கிய, எம் இதயத்தில் நீங்கா இடம்பெற்ற,
எமது அன்புத் தந்தையின் பாதார விந்தங்களில்
இச்சிறு நூலை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 10 - 1940 | 10 - 04 - 2013 |

*சொல்வேந்தன், கலைவாரிதி*

# அமரர். திரு. பரமகுரு இராசகுரு

(பிரசித்த நொத்தாரிசு)

## *திதி வெண்பா*

பரமகுரு இராசகுரு சென்றார் பரலோகம்
குமரனது தாளடைய வன்றோ - இகமதனில்
நந்தன பங்குனி நவிலுமவா சைத்திதியில்
வந்தனைந்த பந்தமறுத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றையுலகம் படைத்துகந் தான் மனத் துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க் கன்பன்திருப்பாதி ரிப்புலியூர்
தோன்றாத் துணையாயிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே! உலாப்பிலாவெளி
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர்ப்பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதி அருணாசலமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பண்டிதர் திரு. ப. இராசகுரு அவர்களின் வாழ்க்கைக் குறிப்பும், அவரின் சேவைகளிற் சிலவும்

1940-10-20 உதயம்

தந்தையார் மாரிமுத்து - பரமகுரு

தாயார் ஆசைப்பிள்ளை மகள் இராசம்மா

1945 இல் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி

1952 இல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சேர்ந்தார்

1958 இல் சிரேஷ்ட தராதப் பத்திரம் (S.S.C.) பரீட்சையில் சித்தி

1960 இல் யா/ வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற பண்டித வகுப்பில் சேர்ந்தார்.

1964 இல் பண்டித பரீட்சையில் சித்தி

பண்டித பரீட்சையில் சித்தியடைந்தமையை முன்னிட்டு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்தைப் பண்டிதர் க. மயில்வாகனார், புலவர் நா. சிவபாதசுந்தரனார், கலைமாமணி இ. சுப்பிரமணியஐயர், அருட்புலவர், சிவநெறிச்செல்வர், பண்டிதர் அ. ஆறுமுகம், பண்டிதை பொன் பாக்கியம், பண்டிதர் அ. சண்முகநாதன், வித்துவான் க. முருகேசனார், வித்துவான் வ.செல்லையா ஆகியோருடன் சேர்ந்து ஸ்தாபித்தார்.

1965 - 1966 இல் பண்ணாகம் ஸ்ரீமுருகன் சன சமூக சேவா வாலிபர் சங்க தலைவராக இருந்து சேவை புரிந்தமை.

1966 இல் உருத்திரபுரம் சென். திரேசா மகா வித்தியாலயத்தில் பிரவேச பாலபண்டித, வகுப்பில் கற்பித்தமை.

1967 இல் தந்தையார் சிவபதமடைந்தமை

1969 இல் காந்தி நூற்றாண்டு விழாவில் இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் சொற்பொழிவாற்றினார்.

03-10-1969 இல் அமரர்கள் தா. மோகனநாவுக்கரசு, க. தெய்வேந்திரம் ஆகியோருடனும் ஏனைய வாலிபர்களுடனும் சேர்ந்து பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தை ஆரம்பித்து, மன்றக் கீதத்தையும் இயற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 - 1971 இல் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி தலைவராய், செயலாளராய் சேவையாற்றினார்.

1971 - 1973 இல் பண்ணாகம் அண்ணாகலை மன்றம் சார்பாக மாலை நேர வகுப்புக்களை ஆரம்பித்து பாடபோதனை செய்தவர்.

1973 இல் பண்டாரவளை சிவசுப்பிரமணியர் கோவிலில் கந்தபுராண விரிவுரையாற்றியமைக்காக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார்.

1974 இல் நொத்தாரிசுப் பரீட்சையில் சித்தி
இதனை முன்னிட்டு பண்ணாகம் அண்ணா கலை மன்றம், எதிர்கட்சித் தலைவர் கௌரவ அமிர்தலிங்கம் தம்பதிகளை அழைத்து இவரை பாராட்டி பாராட்டு விழா நடாத்தியது.

1975 இல் கதிரவேலு சிவக்கொழுந்து தம்பதிகளின் மகள் மல்லிகாதேவி அம்மையாரை வாழ்க்கைத் துணையாக கைப்பிடித்தார்.

1976 இல் நீர்கொழும்பு பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் பெருங் கதையை 21 நாளும் தொடர் சொற்பொழிவாற்றினார்.
முதன் முதலில் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் தொடர்ந்து கந்தபுராண உரை கூறத் தொடங்கியமை.

1977 இல் குருநாகல் சைவ மகா சபையின் அழைப்பின் பேரில் அங்கு சென்று நவராத்திரி விழா தொடர் சொற்பொழிவாற்றினார்.

1979 இல் அருமைச் சகோதரி தெய்வானைப்பிள்ளை மரணம்.

1980 இல் பண்ணாகம் அண்ணா கலை மன்ற 10ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னின்று நடாத்த உதவியதுடன் ஒரு சிறப்பு மலரும் வெளியிடச் செய்தமை.

1981 இல் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவராக இருந்து அமரர் தா. திருநாவுக்கரசு (பாராளுமன்ற உறுப்பினர் வட்டுக்கோட்டை) அவர்களின் உதவியுடன் கட்டிடத்தை விஸ்தரித்தமை.

1983 இல் மகள் கலையரசி உதயம்.

1984 இல் தான் வளர்த்த மகள் கௌரியின் பூப்புனித நீராட்டு விழாவை சிறப்பாகச் செய்தார்.

1985 இல் அகில இலங்கை தமிழ் வளர்ச்சிக் கழகத்தை பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் உருவாக்கி பிரவேச பண்டித வகுப்பை மற்றும் கல்விமான்களுடன் சேர்ந்து நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 இல் பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்களின் வைரவிழாச் சபையின் பொருளாளராக இருந்து சிறப்புற நடாத்தினார். பண்ணாகம் அம்பாள் கலைமன்ற கீதத்தை இயற்றினார்.

1989 - 1992 இல் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளராக இருந்து சேவையாற்றியமை.

1992 இல் பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் தொடர் சொற்பொழிவாற்றினார்.

1993 இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பண்டத்தரிப்புக் கோட்டமும் தமிழீழ கல்வி வளர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்தும் பிரவேச பாலபண்டித வகுப்புகளில் கற்பித்தமை.

1995 இல் அன்புத் தாயின் மரணம்

1997 இல் தனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவை சிறப்பாகச் செய்தார்.

1998 இல் பண்ணாகம் விசவத்தனை முருகன் கோவில் பரிபாலன சபை செயலாளராக இருந்து கும்பாபிஷேகம் சிறப்புற நடாத்த உதவியதோடு விழா மலரும் வெளியிட உதவினார்.

28-03-2005 மகளின் திருமணம்

18-05-2006 பேர்த்தி தமிழ்நிலா உதயம்

16-01-2008 அன்பு மனைவியின் மரணம்

02-09-2008 மூத்த பேரன் பிரியங்கன் உதயம்

11-06-2009 அன்புத் தம்பி சற்குரு மரணம்

27-09-2010 இளைய பேரன் பிருந்தாபன் உதயம்

10-04-2013 இராசகுரு அவர்கள் அமரத்துவம் அடைந்தார்

மேலும் இவர் தமிழரசுக் கட்சி நடாத்திய அறவழிப் போராட்டங்கள் பலவற்றில் பங்குபற்றி பொலீசாரின் குண்டாந்தடியடிக்கும் இரகசியப் பொலீசாரின் விசாரணைக்கும் பலமுறை உட்படுத்தப்பட்டார். தமிழுரிமை கோரி சத்தியாக்கிரகம், உண்ணாநோன்பு பாதயாத்திரை கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் போன்ற போராட்டங்களிலும் ஈடுபட்டார். அத்துடன் எமது ஊரில் உள்ள பொது அமைப்புகள் எல்லாவற்றிலும் பலமுக்கிய பதவிகளை வகித்து சமூகத்தொண்டு புரிந்தார். இவ்வாறு இவ்வுலகில் சீரும் சிறப்புடனும் பலர் போற்ற வழாந்த பண்டிதர் ப. இராசகுரு அவர்கள் விசவத்தனை வேலவனின் பாதங்களைச் சென்றடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பதிவகத்தின் கண்ணீர் காணிக்கைகள்

இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்புரிமை என்றார் இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவர்ஹலால்நேரு.

வாழ்க்கை சக்கரத்தின் சுழற்சியில் ஒவ்வொரு மனிதனும் அகப்பட்டேயாக வேண்டும். பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் இறப்பைச் சந்திப்பதே இவ்வாழ்க்கைச் சக்கரத்தின் நியதியாகும். இவை எல்லாம் எல்லோருக்கும் தெரிந்தபோதும் மனித உறவுகள் எம்மைவிட்டு பிரிந்து செல்கின்ற ஒவ்வொரு கணத்திலும் எமது இதயங்கள் மௌனமாய் சிலநேரங்களில் வெளியில் தெரியக்கூடியதாகவும் அழுகின்றன. அந்நியதியில் எங்கள் மதிப்பிற்குரிய பிரசித்த நொத்தாரிசு பண்டிதர் பரமகுரு இராசகுருவின் பிரிவும் தாங்கொண்ணாத துன்பத்தை தந்துவிட்டது.

அன்புற்று அமர்ந்த வழக்கு என்பது வையத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு (குறள் - 75)

இவ்வுலகில் இன்பத்தை அடைந்து வாழ்கின்றவர் யார் எனின் வாழும்பொழுது பிறரிடம் அன்புகாட்டி வாழ்கின்றவரேயாவார் என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாறு வாழும் பொழுது பிறரை அன்பினால் தன்வயப்படுத்தியவர்தான் எமது பிரசித்த நொத்தாரிசு இராசகுரு ஆவார்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் முதற்படி பிறப்பு, இறுதிப்படி இறப்பு, அவை இரண்டிற்குமிடையில் உள்ள மனிதனின் உரிமைகளை உறுதிப்படுத்தும் உன்னத சேவையை கொண்டு இருக்கும் பதிவாளர்நாயகம் திணைக்களத்தின் தூரநோக்கான பதிவின் மூலம் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மக்களுக்கு உதவுதல் என்ற தொனிப் பொருளை இலக்காகக் கொண்டு அதனை நிறைவேற்றும் பங்காளியாக மக்களின் அசையும் அசையா சொத்துக்கள் தொடர்பிலான சட்டரீதியான ஆவணங்கள் அத்தாட்சிப்படுத்தும் சிறந்த பணியில் தன்னை 1974-06-21 திகதியிலிருந்து இணைத்துக்கொண்ட இவர் தனது இயலாத காலத்திலும் இறுதி மூச்சுவரை தனது பணியினை சிறப்பாகவும் ஒழுங்காகவும் செய்து வந்தார்.

தனது பிரசித்த நொத்தாரிசு பணியினைத் தொடங்கி தனது இறுதிநாள் வரை ஒன்பதாயிரத்திற்கு மேற்பட்ட (9280) ஆவணங்கள் அத்தாட்சிப்படுத்தி மக்களுக்கு சேவையைப் புரிந்துள்ளதுடன் எமது திணைக்களத்தின் கட்டளைச் சட்டங்களுக்கு அமைய ஒழுகி ஒப்படைக்க வேண்டிய ஆவணங்களை குறித்த கால அட்டவணைக்குள் சமர்ப்பித்து எம் நிர்வாகத்திற்குப் பெரிதும் ஒத்துழைப்பு நல்கிய ஒருவராவர். எனது சேவைக் காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு குறைவாகவே இருந்தது. ஏனெனில் அவர் இறுதி நாட்களில் நோய்வாய்ப்பட்டு இருந்தமையால் எமது காணிப் பதிவகத்திற்கு வருவதைக் குறைத்துக்கொண்ட போதும் தனது சேவையை தனது மருமகனார் ஆசிரியர் திரு. அ. முருகதாசன் மூலம் சிறப்பாக மேற்கொண்டு உதவி புரிந்தார்.

அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தார்க்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் ஓர் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது திணைக்களத்தின் சார்பில் எனது அஞ்சலியினைக் காணிக்கை ஆக்குகிறேன்.

*உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு*

**காணி மாவட்டப் பதிவகம்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**திரு. பரஞ்சோதி பிரபாகர் M.A**
**(பிராந்தியத் திட்டமிடல்)**
**காணி மேலதிக மாவட்டப் பதிவாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய நேர்மையாளன்

அரை நூற்றாண்டுக்கு மேலாக அன்பு, பண்பு, நேர்மை, சத்தியம், இன உணர்வு, மொழிப்பற்று ஆகிய மிகச்சிறந்த குண இயல்புகளுடன் நெருங்கிப் பழகிய நண்பர் அமரர் பண்டிதர் பரமகுரு இராசகுரு அவர்களின் மறைவு என்னைப் பெரிதும் பாதித்துள்ளது என்பது மறைக்க முடியாத உண்மை. இப்பூவுலகில் தோன்றிய மனிதப்பிறவி அனைத்தும் அவரவர் கொண்டு வந்த வாசனைக்கேற்ப வாழ்ந்து அனுபவித்து மறைவது விதி என்ற பெயரால் ஏற்றுக்கொள்வதுதான் யதார்த்தம். எனினும் அந்த ஆன்மா இந்தப் பொய்யுடலைத் தாங்கி, வாழ்ந்த காலத்தில் பக்குவமாக வாழ்ந்து காட்டியவர் நேர்மைக்கு உதாரண புருஷராக வாழ்ந்து தொழில் தர்மத்தை இறுதி மூச்சுவரை கடைப்பிடித்தவர். நெத்தாரிசு பட்டத்தைப் பெற்று பணத்தாசையால் அதை விற்றுப் பிளைத்து, நம்பியவர்களை ஏமாற்றி வாழ்வோர், வாழ்கின்ற இந்தக் காலகட்டத்தில் உறுதி எழுதுவதில் உறுதியாய் இருந்து பாமர மக்களினதும் ஏழை, எளியவர்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று வாழ்ந்து காட்டிய ஓர் உத்தமரை இழந்த துயரம் ஆற்றொணா என்பது அவரை நன்கறிந்த அவரிடம் உறுதி எழுதிய அனைத்து உள்ளங்களிலும், பிரதிபலிப்பதை அன்னாரது மரணச்செய்தி அறிந்து பரிதவிப்பதன் மூலம் காணக்கூடியதாய் உள்ளது. இது எளிதில் மறந்துவிடக்கூடியதல்ல.

நண்பரின் இறைபக்தியும் இன்முகமும் விகடகவித்திறமையும் அன்னாரைக் கண்டு அளவளாவும் சந்தர்ப்பங்களில் என்னை உற்சாகப்படுத்தி மெய் மறந்து சிரிக்க வைத்துவிடும். இச்சந்தர்ப்பங்களில் மறைந்த அவரது பாரியாரும் சேர்ந்து விட்டால் "அப்பப்பா" என்னே மகிழ்வு. இடையில் அவரது உயிருக்குயிரான பாசமலர் கண்ணம்மாச்சிறுக்கி குறுக்கிட்டு அவர் மடியில் ஏறி எங்களை இடைநிறுத்தி விடுவாள். இவற்றையெல்லாம் ஆழச் சிந்திக்கும் போது

"நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே நீங்களெல்லாம்
சொற்பனம்தானோ, பல தோற்ற மாயங்களோ!
கற்பதுவே, கேட்பதுவே கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ ஆழ்ந்த பொருளில்லையோ
நானுமோர் கனவோ இந்த ஞாலமும் பொய்தானோ
வீண்படும் பொய்யிலே நித்தம் விதி தொடர்ந்திடுமோ!"

என்று நினைந்து அவர் மகள், மருமக்கள், பேரப்பிஞ்சு உள்ளங்களுக்கு தேறுதல் கூறி நண்பர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரமாத்மாவை இறைஞ்சுகின்றேன்.

இவ்வண்ணம் நண்பன்
**மா. மகாதேவன்**
(இளைப்பாறிய கால்நடை அபிவிருத்தி அலுவலர்
வட்டுக்கோட்டை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னலம் ஓம்பாது தமிழ்நலம் ஓம்பிய பண்ணாகம் பண்டிதர் பிரசித்த நொத்தாரிசு

# அமரர் பரமகுரு இராசகுரு

பண்டிதர் ப. இராசகுரு என்றவுடன் அனைவரது உள்ளத்திலும் அவரது சிம்மக்குரல்தான் ஒலித்துக் கொண்டிருக்கும். மிக இளமைக்காலத்திலிருந்தே அவர் ஏறாத மேடைகளில்லை. பட்டிமன்றமோ, கவியரங்கமோ, தனிப்பிரசங்கமோ, கந்தபுராண உரை சொல்லும் சபையோ அங்கெல்லாம் அவர் காணப்படுவார். வீரம் செறிந்த புறநானூற்றுப் பாடல்கள் யாவும் அவருக்கு மனப்பாடம். அது ஒரு காலம். அண்ணன் அமிர்தலிங்கத்தின் அடியொற்றி அரசியல் மேடைகளின் முழக்கமிட்டார். உள்ளத்தெளிவும், உணர்வும், அறிவுவளமும், தமிழ் மொழிப் பற்றும், சிம்மக்குரலும் சொல்வேந்தன், கலைவாரிதி அமரர் பரமகுரு இராசகுருவைச் சமுதாயத்தின் முன்னணியில் நிறுத்தியது.

காந்தியவாதியும், சமூகப்பற்றாளருமான அமரர் பரமகுருவாகிய தந்தையும் இராசாத்தியம்மாவும் புரிந்த அருந்தவப் பேற்றாலுதித்த தலைமகனே அமரராவார். தன் தந்தையுடன் சேர்ந்து பல விழாக்களுக்குச் சென்று பல அறிஞர்களுடைய கருத்துரைகளை மிக இளமையிலேயே அவர் கேட்டுப் பெற்றுக்கொண்டார். பண்டிதர் பரீட்சை சித்தியடைந்ததும் வேலையில்லாத்திண்டாட்டம் அவரையும் அணுகியது. எனினும் மனம் தளராது தனது தமிழ்த்தொண்டை அவர் ஆற்றி வந்தார். வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பாலபண்டித, பண்டித வகுப்புக்களில் அவரும் எம்முடன் சேர்ந்து கற்பித்து வந்தார். ஊதியம் கருதாது நாம் ஆற்றிய அந்தச்சேவை உன்னுதற்கரியது.

அமரர் அவர்கள் எனது கணவனார் குடும்பத்துடன் மிக நெருங்கிய நட்புக் கொண்டவர் எனக்கு ஒரு அருமைத்தம்பி. நான் திருமணம் செய்த பின்பு எங்கள் குடும்பத்துடன் நன்கு உறவு கொண்டாடி இன்பதுன்ப நிகழ்ச்சிகள் யாவற்றிலும் பங்கு கொண்டுள்ளார். மரணபரியந்தம் 'அக்கா'வென்ற சொல்லுக்கு அடுத்த சொல் அவர் என்னுடன் பேசியதில்லை. தம்பி பண்டிதர் இராசகுரு அவர்களது சேவையைப் பக்கம் பக்கமாக விமர்சித்துக்கொண்டு போகலாம். அவரது நகைச்சுவை நிரம்பிய சில கதைகள் இன்றும் என்னுள்ளத்தில் நிழலாடுகின்றன.

தூய பிரம்மசரிய ஒழுக்கம் நிரம்பிய தம்பி இராசகுரு அவர்கள் நல்லதொரு இல்லத்தலைவி கிடைக்கும் வாய்ப்பைப் பெற்றார் கணவனுக்கேற்ற நாயகியாக வந்தோரை வரவேற்று உபசிக்கும் இல்லறப் பண்பு கொண்டவராய் அம்மையார் கிடைத்தமை முன்னைத் தவமேயாம். அமரரின் வாழ்வு திருமணத்தின்பின் மேலும் பூத்துப் பொலிவுற்றது. சுற்றத்தவரை ஒம்புதல், உறவினர்களுடன் கொண்டாடுதல், நண்பர்களுடன் உறவாடுதல், விருந்தினரை உபசரித்தல் ஆகிய நற்பண்புகளுக்கு இருப்பிடமாக அவர் இல்லம் விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமிருந்தும் மக்கட் பேறில்லையே என ஏக்கமுற்ற வண்ணம், எட்டுவருடத் தவத்தின் பேறாகக் கலையரசி வந்துதித்தார். கலையரசி தனியரசியாக வாழ்ந்து, கற்றுத் தற்போது குடும்பத் தலைவியாகி விட்டார். சொந்த மைத்துனராகிய அரிச்சந்திரன் முருகதாஸன் என்ற பண்பான பட்டதாரி ஆசிரியரை மணந்து மூன்று மக்கட் செல்வங்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்கின்றார்.

நிரம்பக்கற்று, நிரம்ப உழைத்து, நிரம்பிய வாழ்வு வாழ்ந்த அமரருக்கு மருமகனும் மகன்போன்று விளங்குகின்றார். சில வருடங்களின் முன் மனைவியை இழந்தமை அவருக்குப் பெருந்தாக்கமாகிவிட்டது. எனினும் யாது செய்யலாம். யாவும் அளந்த அளவுதான் கிடைக்கும் அமரர் அவர்கள் சிலகாலம் நோயுற்று இருப்பினும் குடும்பத்தினர் அவரை நன்கு பராமரித்தனர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த என் அருமைத் தம்பி பண்டிதர் இராசகுரு அவர்கள் 10-04-2013 புதன்கிழமை காலை 5.55க்கு விசவத்தனை முருகப்பெருமானின் பாதாரவிந்தங்களை சென்றடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யாவரும் பிரார்த்திப்போம்.

அன்பு அக்கா
பண்டிதை. திருமதி. பொன்பாக்கியம்
சுழிபுரம்

# இதய அஞ்சலி

"சமூக சேவையின் பொருட்டு வாழ்த்தைப் பெறுவார் பேறுபெற்றார்"
ஏனெனில் விண்ணகம் அவர்களதே

எங்கள் பாடசாலையின் உயர்தர தமிழ் ஆசிரியர் முருகதாசனின் பாசமிகு மாமனார் அமரர் திரு. பண்டிதர் ப. இராசகுரு அவர்கள் ஒரு சிறந்த சமூக சேவையாளர். இவரை எனக்கு நேரடியாக அறிமுகமில்லாது விடினும் இவரது சிறப்பை பலரது வார்த்தைகளில் ஒலிக்கக் கேட்டிருக்கின்றேன். தமிழரசு கட்சியின் ஒரு தூணாக நின்று மக்களின் உரிமைக்காக உழைத்ததோடு சிறந்த பண்டிதராக பட்டம் பெற்றது அவரது வாழ்வின் பேறாகும். மேலும் எல்லோருக்கும் உதவக்கூடிய பிரசித்த நொத்தாரிசுவாக எந்த நாளும் என்நேரமும் சிறப்பான சேவையை ஆற்றி இறைவனடி சேர்ந்துள்ள அவரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவதோடு அவரின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்ப உறவினரின் கவலைகளில் பங்கு கொள்கிறேன்.

திரு. து. யேசுதானந்தர்
அதிபர்
மு/ மல்லாவி மத்திய கல்லூரி
முல்லைத்தீவு மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நண்பன் இராசகுரு

சிநேகிதமும் நட்பும் பரிமாணங்களால் வித்தியாசம் ஆனவை. வாழ்வில் ஒத்தகருத்து, கொள்ளையால்தான் பண்டிதர் இராசகுரு அவர்கள் இனிய நண்பரனார்.

அமரராகி விட்ட இராசகுருவிடம் சிறுபராயப் பள்ளிப் பருவத்திலிருந்து சக மாணவனாக, உறவினனாக, துன்ப துயரங்களில் பங்குகொள்பவனாக மற்றும் விளையாட்டில், அரசியலில், அகிம்சைப் போராட்டங்களில் ஒருவர்கொருவர் கருத்தில் ஒற்றுமையாகவும் விட்டுக்கொடுப்புடனும் அவர் அமரராகும் வரை இருவரும் நடந்துள்ளோம். இதனால் எமது சிநேகிதம் இறுக்கமான நட்பாகியது. நமது இருவருக்குக்கிடையிலான நட்பு நெருங்கி குடும்ப நட்பாக மாறியது. இந் நட்பு வள்ளுவன் வாக்கிற்கிணங்க "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்றவகையில் எமக்கிடையே ஏற்படும் பலவகையான கஸ்ரங்களில் ஒருவர்க்கொருவர் உதவியாக வாழ்ந்தோம். இதனை ஆங்கிலத்தில் 'A Friend in need is a friend indeed' எனக் கூறுவர். நண்பருக்கு அரச தொழில் கிடைக்கவில்லை. அரசியலில் ஆள்லிருந்தும் இவர் தான் தொழில் பெறுவதற்கு மற்றவர்களிடம் சென்று தன் நண்மைக்காக உதவி கேட்காத மனப்பாங்கு அவரிடமிருந்தது. எனினும் தனது விடாமுயற்சியாலும் அயரா உழைப்பாலும் நொத்தாரிஸ் சோதனையில் சித்தியடைந்து தொழில் பார்த்து சந்தோஷமடைந்தார். அத்துடன் அன்னாருக்கு அவர் மனதுக்கு இயைந்த ஊரிலே, உறவிலே உள்ள பண்பான மனைவி வாழ்க்கைத் துணையாக கிடைத்தது அவவுடன் சந்தோஷமாக வாழ்ந்தார்.

அமரராகிய அன்புக்குரிய நண்பர் பண்டிதர் அவர்களால் எனக்கு பல நன்மைகள் ஆறுதல்கள் கிடைத்தது. அவற்றில் முக்கியமானவை,

1) 1975ஆம் ஆண்டில் கண்டி தென்னக்கும்புற என்ற இடத்திற்குச் சென்று சுவாமி சச்சிதானந்திஜிடம் இருவரும் ஆசி பெற்றமை.
2) 1986 கடைசியில் எனது பாசத்திற்குரிய இரு சகோதரர்களின் அகால இழப்பின் போது எனது தந்தையார் உள்ளடங்க எமது குடும்ப அங்கத்தவர்கள் எல்லோருக்கும் தினம் தினம் வந்து ஆறுதல் கருத்து கூறியமை. இவ்வாறு பல சம்பவங்கள் எமது இருவரதும் குடும்பத்திற் கிடையேயும் பின்னிப் பிணைந்துள்ளன. மேலும் இவர் தனது ஒரே மகளை படித்த உறவினனான அரிச்சந்திரன் மகன் முருகதாசனிற்கு மணம் முடித்து வைத்து மகிழ்வடைந்தமை.

அவரது பிற்காலத்தில் தனது அன்பு மனைவியை இழந்து பெருந்துயரத்துடன் வாழ்ந்து வரும்போது தனது ஒரே ஒரு தம்பி சற்குருவின் இழப்பு இவரிற்கு பேரிடியாகி விட்டது. இதனால் அமரர் அவர்கள் மனம் தளர்வடைந்து நோய்வாய்ப் பட்டார். அவரை எங்கள் குலதெய்வமான விசவத்தனைப் பதியுறை முருகன் தனது பாதார விந்தங்களில் சேர்த்துக் கொண்டார். அவர் அடிக்கடி கூறும் ஓர் வார்த்தை "துட்டனைக் கண்டால் தூர விலகு" என்பது இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அமரரின் பிரிவால் துயருறும் மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறேன்.

பண்ணாகம்

நண்பன்:- ச. கனகரசன்
ஓய்வுநிலை பிரதி நில அளவையாளர் நாயகம்
(Retd Deputy Surveyor General)
உறுப்பினர். வலி மேற்கு பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் இராசகுரு

பண்ணாகம் பதியை இரு பண்டிதர்கள் அலங்கரித்தனர் அவருள் ஒருவர் பண்டிதர் இராசகுரு என்னிடம் ஆங்கிலம் கற்றவர். இவருடைய உறவும் எனக்கு மிகுந்த நன்மை கொடுத்தது. அவர்களுடன் உறவு வைத்திருந்ததை நினைத்துப் பெருமையடைகிறேன்.

பண்டிதர் இராசகுரு பண்டிதர் பட்டம் பெற்ற பின் பிரசித்த நொத்தாரிசு பட்டமும் பெற்று உறுதி எழுதும் தொழிலை மேற்கொண்டார். எனக்கும் உறுதிகள் எழுதி உதவியவர். மற்றவர்கள் சொல்வதின் நியாயத்துக்கு மதிப்புக்கொடுப்பவர் அடம்பிடிக்கமாட்டார்.

பண்டிதர் இராசகுருவின் தந்தை பரமகுரு அவர்கள் கூட்டுறவு முகாமையாளராக இருந்தவர். அவ்வகையில் பரமகுரு அவர்கள் தனது நேர்மையைத் தடம்பதித்து தனது கிராமத்தில் மட்டுமல்ல அயற்கிராமங்களிலும் நன்மதிப்பைப் பெற்றார்.

'தந்தை மகனுக்காற்றும் உதவி அவயத்துள் முந்தியிருக்கச் செயல்'

'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றன் கொள் எனும் சொல்'

இவ்விரண்டு குறல்களையும் பாடிய வள்ளுவர் பரமகுரு இராசகுருவை மனதில் இருத்தி தான் பாடினாரோ தெரியாது.

பண்டிதர் இராசகுரு தமிழ்த் தொண்டாற்றியதுடன் தமிழன்னையின் விடிவுக்காகவும் மனம்வாக்கு காயத்தால் உழைத்தவர் என்பதை உலகறியும். தமிழ் விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொண்டு விடுதலை வேட்கையுடன் போராடியவர். மகாத்மா காந்தியின் கொள்கைகளை இம்மியளவும் பிசகாமல் காத்து வாழ்ந்தவர்.

அவரது நற்கொள்கைகளை அவரது குடும்பத்தினர் போற்றி வருகின்றனர். அவர் நல் மனைவி, நல்மகள், நல் மருமகன், பேரப்பிள்ளைகள் பெற்று அவர்களின் ஆதரவில் ஒரு குறையின்றி வாழ்ந்து அமரத்துவம் அடைந்தார். அவரது ஆத்மா எல்லாம் வல்ல வழக்கம்பரை தாயின் திருப்பாதங்களில் தஞ்சமடைய பிரார்த்திப்போமாக.

சி. ஞானச்சுந்தரமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை.சோ.சேனாதிராசா. பா.உ

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

30,மாட்டின் வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே:94212228776
கை.பே:94777373377
30.04.2013

# பண்டிதர் இராஜகுரு
## எம் கண்ணீர் அஞ்சலி

பண்டிதர் இராஜகுரு தனது எழுபத்துமூன்றாம் வயதினில் இயற்கை எய்தினார். இச்செய்தி எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும், ஆழமான துக்கத்தையும் தந்தது. அந்தநேரத்தில் நான் இந்தியாவில் நின்றதால் இறுதி நேரத்தில் இவர் முகத்தைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. மிகவும் ஆதங்கப்பட்டுவிட்டேன். அவர் தந்தையர் வழியிலே காந்தியப் பாதையில் நம்பிக்கை கொண்டவர். உயர்ந்த பண்பாளர். சிறந்த இனப்பற்றாளர். ஆழமான அன்மீகவாதி. தமிழ்மொழி, இலக்கிய, இலக்கண வித்தகராக விளங்கியவர். தமிழ்மொழிப் "பண்டிதர்" ஆகவும் சிறந்த சொல்லாண்மை மிக்கவராயும், "சொல்வேந்தர் எனும் பெயர் பெற்றவராயும் விளங்கினார். தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம் அவர்களின்மீது அபிமானம் மிக்கவர். தமிழ் மண்ணில் "தமிழரசு" வாதியாய், தமிழராட்சி நிலைநாட்டத் தன்னை அர்ப்பணித்து, தமிழின விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுழைத்தவர். யாவரும் அறிந்த பேச்சாளர். ஊரறிந்த கொள்கைப்பற்றாளர், தேசமறிந்த இலட்சிய வாதி. மக்கள் விசுவாசமிக்க சமூகத் தொண்டராகவும், ஊரறிந்த மக்களின் தலைவனாகவும் விளங்கியவர். அவர் குடும்ப விளக்காகவும், குலவிளக்காய் ஊர்மக்களின் கலங்கரை விளக்காகவும் பிரகாசித்தவர்.

பண்டிதர் மனையாளும் நோய்வாய்ப்பட்டு மறைந்தார். மகளுக்கு தந்தையாகவும், தாயாகவும் இருந்து வாழ்ந்து காட்டியதை அறிவேன். அவர் மருமகனும் ஓர் அசிரியர், இலட்சியவாதி, இனவிடுதலைப் பற்றாளர். பண்டிதர் குடும்பம் மட்டுமல்ல ஊரே அவர் வழி கொள்கைக் கூட்டமாய் அணிதிரண்டு நிற்கச்செய்தவர். அன்னாரின் இழப்பு எமக்குமட்டுமல்ல, ஊருக்கெல்லாம், தமிழருக்கெல்லாம் பேரிழப்பாகும். தமிழ் இருக்கும் வரை பண்டிதர் இராஜகுரு நெஞ்சிலிருப்பார். அவர் ஆன்மம் ஈடேற அவரை நினைத்து எம்மை அர்ப்பணிப்போம்.

மாவை.சோ.சேனாதிராசா. பா.உ

மாவை.சோ.சேனாதிராசா பா.உ.
யாழ்மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனிய அண்ணர்

எனது அன்புக்குரிய பண்டிதர் இராசகுரு அண்ணர் என்னிலும் பத்து வருடங்கள் வயதில் முதியவராக விருந்தாலும் 1970ஆம் ஆண்டிலிருந்து எனக்கு நண்பனாகவும், எனது அருமை மைத்துணியை திருமணம் செய்ததிலிருந்து நெருங்கிய உறவினராகவும் வாழ்ந்து வந்தார். இவர் மிகவும் எளிமையான வாழ்கை வாழ்ந்தவர். இவருடைய தந்தையார் காந்திக் கொள்கையுடையவர், பிடி அரிசி சேர்த்து எமது சனசமூக சேவா சங்க கட்டிடத்தை தனது நண்பர்களுடன் சேர்ந்து அமைத்து எமது கிராமத்துக்கு முன்மாதிரியாக வாழ்ந்தவருடைய மகனாகிய திரு பண்டிதர் இராசகுரு தந்தை வழியில் காந்திக வாதியாக வாழ்ந்தார். சாதி ஒழிப்பு, தமிழ் மக்களின் உரிமைக்காகவும், தனது வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்தவர், மேடைப் பேச்சில் எதிர்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்துக்கு அடுத்த நிலையில் பேச்சு வன்மையும், இளம் உள்ளங்களை எல்லாம் தன் சொல் வன்மையால் உரிமைக்காக போராட வழி வகுத்தவர். விவாத மேடைகளில் பல சாதனை படைத்தவர், அதனால் எமது கிராமத்துக்கு பெருமை தேடித்தந்தவர்.

மேலும் இவர் தனது அரசியல் வாழ்க்கையினால் அரசாங்க உத்தியோகத்த ராக வாய்ப்பு இல்லாத நேரத்தில் அவருடைய தமிழ் அறிவினால் நொத்தாரிஸ் பரீட்சையில் தெரிவாகி, தனது தொழிலை மிகவும் கண்ணியமாகவும், நேர்மையா கவும் செய்து வந்தவர், தனது ஒரே ஒரு மகளை தாயிலும் பார்க்க செல்லமாக வளர்த்து, அவவிற்கு தகுதியான கணவனை திருமணம் செய்து இன்பமாக வாழ்ந்தவர். அவர் எமது கிராமத்தில் பல செல்வாக்குடனும் பாரட்டக்கூடிய முறையிலும் வாழ்ந்தவர் இறுதிக்காலத்தில் அவருக்கு தீய சக்திகளினால் ஏற்பட்ட துன்பியல் நிகழ்வினாலும் மனைவியை இழந்ததினாலும் மனம் பாதிக்கப்பட்டவராக மிகவும் வேதனைப்பட்ட நிலையில், இரத்த அமுக்க நோயினால் இயற்கை மரணம் அடைந்தார். பாதிப்புக்குள்ளான குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதை விட நாம் என்ன செய்ய முடியும்.

தோன்றில் புகழோடு தோன்றுக என்ற வாக்குக்கு அமைவாக வாழ்ந்து முடித்து இறைவனடி சேர்ந்த ஆன்மாவை நல்லகதியடைய இறைவனை பிரார்த்திப் போமாக.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

**தங்கள் அன்புக்குரிய தம்பி**
**த. துரைலிங்கம்**
**(ஓய்வுநிலை நிறைவேற்று பொறியியலாளர்**
**கட்டிடத் திணைக்களம்)**

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

பண்டிதர் இராசகுரு அவர்கள் 2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து எனக்கு அறிமுகமானவர் தேர்தல் காலங்களில் தமிழ்தேசியம் வெற்றி பெறுவதற்கு ஆதரவாக தமிழினத்துக்கான அறவழிப் போரட்டங்களிலும் சத்தியாக்கிரகங்களிலும் பங்குபற்றியவர் இவரது தமிழ் சமுகப்பணிகளைப் பராட்டி அண்ணாகலைமன்றம் பொன்விழா எடுத்தமையை நான் அறிந்துள்ளேன்.

தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் நீண்ட பக்கங்களை கற்றவர்கள் அனுபவத்தில் கண்டவர்கள் பலர் இன்று எம்மை விட்டு பிரிந்துள்ளனர் அந்த வகையில் பண்டிதர் ஐயா அவர்களும் அவற்றினை நன்கு அறிந்தவராகவும் ஓர் விடுதலை விரும்பியாகவும் தன்மானம் உள்ள தமிழனாகவும் வாழ்ந்தவர். இப்படியானவர்களுடைய இழப்பு விடுதலை நோக்கிய பயணத்தின் தடங்கல்கள் என்றே நான் கருதுகிறேன். அன்னாருடைய இறுதிக்காலத்தில் அவர் சுகயீனம் உற்றிருந்த வேளையில் அவரைப் பார்க்க முயற்சித்தும் அது நிறைவேறவில்லை. இருந்தும் அன்னாரது இறுதிச்சடங்கில் பங்கு பற்றியமை எனக்கு ஓரளவு ஆறுதலை அளிக்கின்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

**கௌரவ சுரேஸ் பிரேமச்சந்திரன் M.A**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ் மாவட்டம்**

# ஆருயிர் நண்பன் இராசகுரு

அன்பாலும் பண்பாலும் நல்வழிகாட்டி வாழ்வின் இலக்கணமாக வாழ்ந்து இறையடி சேர்ந்த அமரர் பரமகுரு இராசகுரு அவர்கள் பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் இவர் என்னுடன் ஒன்றாய்ப் படித்து பின்பு தமிழ் இனத்தின் விடிவிற்காக அரசியலில் அரும்பாடுபட்டவர் என்பதை யாரும் மறந்து விட முடியாது. பின்பு அவரின் கல்வித் திறமையால் நொத்தாரிசுப் பரீட்சையில் முதல் தரமான சித்தி பெற்று பிரசித்த நொத்தாரிசாக திகழ்ந்து தனது வாழ்க்கையை நடத்தியுள்ளார். ஆனால் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம், இடையில் காலதூதன் இழுத்துக்கொண்டார். இதனால் அவரின் குடும்பத்துக்கு பேரிழப்பு இருந்தும் மோட்சத்தில் நல்ல பலன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. அவரின் பதவியை பரிபாலித்துக் கொண்டிருந்த அந்த விசவத்தனை முருகன் அவருக்கு நல்ல மோட்ச பதவியைக் கொடுப்பான்.

**சங்கீத பூஷணம், கலாபூஷணம்**
**வை. உருத்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

பண்டிதர் அவர்களை நான் அறிந்துள்ளேன் அரசியல் விடயமாக நான் அவருடைய வீட்டிற்கு சென்று கதைத்து வந்துள்ளேன். இலங்கை தமிழரசுக் கட்சியினூடாக அவர் பற்றி நான் பலவிடயங்கள் அறிந்திருக்கிறேன். தந்தை செல்வா தளபதி அமிர்தலிங்கம் போற்றோரது பாதையிலே இவர் தொழிற்பட்டவர். விடிவினை நோக்கிய தமிழர்களின் பயணத்தில் தமிழின விடுதலைக்காக சாத்வீக போராட்டங்களில் தடங்களை முன் பதித்தவர்களில் பண்டிதர் ஐயா அவர்களும் பணியாற்றியுள்ளமை நான் அறிந்த வரலாறு ஆரம்பகாலங்களில் இனவிடுதலைக்கான அகிம்சை வழிப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போது இவர்களும் தொண்டாற்றியுள்ளார்.

தனது வயது முதிர்ந்த காலத்திலும் கூட வார்த்தைகளில் தெளிவினை நான் அவரிடத்தில் கண்டுள்ளேன். அது அவருடைய நீண்டகால அரசியல் அனுபவத்தினதும் உறுதிப்பாட்டினதும் வெளிப்பாடு என்று கருதுகிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம். அவரின் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களை சமர்ப்பிக்கின்றேன்.

**கௌரவ E. சரவணபவன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ் மாவட்டம்**

# துயரில் பங்கு கொள்கிறோம்

அன்பின் கண்ணம்மா, முருகதாசன், பிள்ளைகள், மற்றும் உறவினர்களுக்கு இன்று இராசகுரு அத்தான், உங்கள் தந்தையார், மாமனார், பேரனார் இறந்த செய்தி கேட்டு கவலையுற்றோம். என்ன செய்வது எங்களை எல்லாம் விட்டுச் சென்று விட்டாரே. எங்களால் என்னதான் ஆறுதல், தேறுதல் சொன்னாலும் உங்கள் பிரிவுத்துயரை ஆற்றுவது கடினம் காலந்தான் உங்கள் கவலையை ஆற்ற வேண்டும். நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடையது இவ்வுலகு உங்கள் தகப்பனார், மாமனார், பேரனார் ஆத்மா எங்கள் குலதெய்வம் விசவத்தனை முருகப்பெருமான் பாதத்தில் சாந்தி அடையட்டும் எல்லோரும் அவருக்காக பிரார்த்திப்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**உங்கள் உறவினன்**
**அ. இராமலிங்கம் குடும்பம்**
**நோர்வே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை
# වලිකාමම් බටහිර ප්‍රාදේශීය සභාව
# VALIKAMAM WEST PRADESHIYA SABHA

சுழிபுரம் චුලිපුරම් CHULIPURAM


Chairman / தவிசாளர் } திருமதி.நா.ஐங்கரன் Mrs.N.Ainkaran

செயலாளர் / Secretary } திருமதி.சா.உருத்திரசம்பவன் Mrs.S.Uruthirasampavan

எனது இல. / මගේ අංකය / My No. } NP/14/41(17)1/1/Chairman

திகதி / දිනය / Date } 08/05/2013

உமது இல. / ඔබේ අංකය / Your No. }

E-mail: valiwestps@gmail.com


"தோன்றிப் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க இவ்வுலகத்தில் பிறந்து மிகுந்த புகழ் பெற்று வாழ்ந்தவர்களுள் பண்டிதர் இராசகுருவும் ஒருவர். அவர் தமிழை ஆழமாகக் கற்று தமிழ் மொழிப்பண்டிதராக விளங்கியவர். அத்தோடு நின்றுவிடாது சட்டத்துறையினைக்கற்று பிரசித்த நொத்தாரிசுவாக தொழில் புரிந்தவர். அவர் ஒரு நல்ல பண்டிதர் மட்டும் அன்றி ஒரு நல்ல நேர்மையான நொத்தாரிசும் ஆவார். இப் பகுதியிலே பல உறுதிகளை அவர் எழுதியிருக்கிறார். அவர் அத்தாட்சிப்படுத்திய பல உறுதிகள் எங்கள் அலுவலகத்திற்கு சோலை வரி செலுத்துவதற்கு வருவதை நான் பார்த்திருக்கின்றேன். இவர் தன் தொழிலோடு மட்டும் நின்றுவிடாது பல சமூகப்பணிகளையும் புரிந்துள்ளார். இலக்கியம், ஆன்மீகப்பேச்சு, கவியரங்குகள், பட்டிமன்றங்கள், விவாத மேடைகள் பலவற்றில் நான் அவரைக் கண்டிருக்கின்றேன். அவரின் இழப்பு எமது பிரதேசத்திற்கு பேரிழப்பு என்றே எண்ணுகின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்திக்காப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

தவிசாளர்
திரு.திருமதி.ச.ஐங்கரன்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

திருமதி.நா.ஐங்கரன்
தவிசாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை
சுழிபுரம்


☎ Chairman 021 3202229 ☎ Secretary 021 321 2465 ☎ Office 021 225 0144 ☎ Fax 021 225 0144





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புடையாளர் பரமகுரு இராசகுரு

பண்புடையாளர் பரமகுரு இராசகுருவைப் பார்ப்பது இன்பம் பழகுவது இன்பம், பேசுவது இன்பம், கருத்துக்களைப் பரிமாறுவது இன்பம். காந்திய வழியைத் தன் வழியாகவும் வாழ்வாகவும் வரித்துக் கொண்டவர். எளிமை அவரது கோலம் சிரிப்பு வரவேற்பும் அவரது தோற்றம். 'பிறர் ஈனநிலை கண்டு துள்ளும்' தர்மா வேசம் கொண்டது அவது நெஞ்சு பிறப்பின் அடிப்படையில் தமிழர் என்பதனால் பாரபட்சம், புறக்கணிப்பு, ஒடுக்கல் என்பன சிங்கள பேரினவாத அரசால் நிகழ்த்தப்பட்டபோது, ஒடுக்குமுறை எந்த வடிவத்தில் வருகிறதோ அந்த வடிவத்தில் எதிர்கொள்ளுதலே மனிதப் பண்பு. அந்தவகையில் தமிழ்த் தேசியத்தினால் ஆட்கொள்ளப்பட்டார் இராசகுரு என்ற பண்டிதர். ஜனநாயகம் என்ற ஒழுக்கம், சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் என்ற விழுமியங்களின் விழுக்காடு தமிழ்ச்சமூகத்தில் தாழ்வுற்றதைக் கண்டு பொங்கினார். "ஏற்றத்தாழ்வு எம்மத்தியில் இருப்பின் எவ்வாறு உரிமை கோர நாம் தகுதியுடையோம்" என்ற கேள்வியை எழுப்பினார்.

கலைஞர் நடிகவேள் வி. வி. வைரமுத்துவின் நாடகத்தை ஆலய வீதியில் அரங்கேற்றினால் 'மழை வந்து குழம்பும்' என்ற போலிப் பிரசாரமொன்று அக்காலத்தில் நிலவியது. 1969இல் மெய்கண்டான் பாடசாலைப் பின் பனை வெளியில் தமிழர் தலைவராக விளங்கிய அ. அமிர்தலிங்கம், பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோர் தலைமையில் வைரமுத்துவின் 'மயானகாண்டம்' அரங்கேறியது. அண்ணா கலைமன்றம் தோன்றியது. அதன் முன்னிலைப் போராளியாய் காந்தீஜீத் - தொண்டனாய் - தீண்டாமைக்கெதிராகச் சுக்கானைப் பிடிப்பதில் முன்னின்றவருள் முதன்மையானவராக பண்டிதர் இராசகுரு தனது வரலாற்றுக் கடமையைப் புரிந்தார். 'சாதித் திமிருடன் வாழுந்தமிழர் பாதித்தமிழரடா' என்ற கவிஞர் சுபத்திரனின் கவிதையின் செயல்வீரரானார்.

1984 - 1987 காலப்பகுதியில் இலங்கை அரசு வடபகுதி மக்களுக்கு எரிபொருள் தடையை விதித்தது. அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. கண்ட கண்ட இடங்களில் இளைஞர்கள் கொல்லப்பட்டனர், கடத்தப்பட்டனர் அப்போது 'மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்' அமைக்கப்பட்டது. அதில் இணைந்து வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் எரிபொருள் தடைக்கெதிரான உண்ணாவிரதம், ஊர்வலப்போராட்டங்களில் கலந்து தன் பங்கை வழங்கினார்.

அயல் கிராமமான பணிப்புலம் பகுதியில் 1972 இல் உருவாகிய 'காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின்' ஆண்டுவிழாக்களிலும் இலக்கிய விழாக்களிலும் பொது நிகழ்வுகளிலும், மது ஒழிப்பு இயக்க முயற்சிகளிலும் ஊக்கமும் உதவிகளும் வழங்கியதோடு சிறந்த சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்.

தமிழ்ச் சமூகமும் இலங்கை மக்களும் 1977இன் பின் திறந்த பொருளாரச் சூடாட்டத்தில், 'கடன் கலாசாரம்' மேன்மையுற்ற நிலையில் நுகர்வுப் பண்பாட்டில் அடையாளங்களையும் வாழ்வையும் தொலைத்துள்ளனர். பண்டிதர் பரமகுரு இராசகுரு அவர்கள் ஆர்வமாக மனப்பாடமாக ஒப்புவிக்கும் குறளே எமக்கு அவரின் மறுபிறப்பு மந்திரமாக இன்றும் காதில் ஒலிக்கிறது.

"ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை"

**சோ. தேவராஜா**
**சட்டத்தரணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரவணைப்பெனக்கு யாரப்பா?

அப்பா என்ற சொல்லாலே
அகிலம் தன்னில் வாழ்ந்தேனே
அப்பா என்ற உறவின்றி
அன்பே எனக்கு தெரியலையே
அகிம்சை வழியில் தான் நின்று
அன்பை பற்றி போதிப்பீர்
அப்பா நீங்கள் இல்லையென்றால்
அரவணைப் பெனக்கு யாரப்பா

அம்மா எனக்கு இல்லையென்று
அழுது நான் புரண்டபோது
அப்பா நான் இருக்கையிலே
யார் உனக்கு வேண்டுமென்றாய்
அந்த வார்த்தை பொறுக்கலையோ
ஆண்டவன் மனதில் ஏற்கலையோ
அப்பா நீங்கள் இல்லையென்றால்
அந்த இடமே வெறுமையப்பா

உரிமையாக கேட்டுவிட
உடன்பிறப்பும் இல்லையப்பா
உன்னையே மறந்திடுவாய்
என்னையே நினைத்திருப்பாய்
பிள்ளையின் வாழ்வு பெரிதென்று
பிடிவாதம் தனை நீ மறந்தாய்
பேரமக்கள் தனைக் கண்டு
பேருவகை அடைந்திட்டாய்

ஏழை மக்கள் தனைக்கண்டால்
ஏந்தி எடுத்து வரவேற்பீர்
ஏழ்மை நிலையை அறிந்திட்டு
ஏதனம் ஒன்று கொடுத்திடுவீர்
எடுத்த காரியம் நிறைவேற்றி
ஏற்றமுடனே வாழ்ந்தீரே
ஏங்கி நானும் அழுகின்றேன்
எங்கே உன்னை காண்பதப்பா

அருமையாக பெற்றெடுத்து
பெருமையாக வளர்த்தீரே
எடியென்ற வார்த்தையினை
எந்நாளும் கேட்டதில்லை
தடியென்ற பொருளினை
தண்டிக்க எடுத்ததில்லை
தாங்குவேன் எப்படி நாள்
தாங்குபடி நீர் வழர்க்கலையே

கடவுளே எனக்கு அப்பாவென்றேன்
காலனுக்கு கருணையில்லை
கவர்ந்து அவன் சென்றுவிட்டான்
கதறி நான் அழுகின்றேன்
கடுந்துயரில் மூழ்குகிறேன்
கந்தா இது தெரியலையோ
இரண்டு கண்ணையும் ஏன்பறித்தாய்
இனிய வாழ்வை ஏன் தொலைத்தாய்

வருத்தமென்று சொல்லமாட்டீர்
வருந்துவேனே நானென்று
தர்கமென்னுடன் வைக்கமாட்டீர்
தாங்கமாட்டேன் நானென்று
வாடியிருந்த போதும் நீங்கள்
சாவை நினைத்ததில்லையப்பா
வாழ வேண்டும் உனக்காய் என்பாய்
வாடிடுவேன் நானென்று

மகள் என்னை கண்டவுடன்
மனம் குளிரச் சிரித்திடுவீர்
மறுபேச்சுச் சொல்லாமல்
மணவாழ்வை எனக்களித்தீர்
மருந்து நீ யென்றிடுவாய்
மனமகிழ்ச்சி கொண்டிடுவேன்
மறப்பேனா உன்னையப்பா
மறுபிறவி எடுத்தாலும்

கண்ணை இமை காப்பதுபோல்
காத்த இனிய அப்பாவே
நினைத்ததெல்லாம் வேண்டித்தந்த
நினைவு மறக்குதில்லையப்பா
அம்மாவிட்டுப் போனதனால்
எங்கள் கூடு குலைத்ததப்பா
குஞ்சு என்னை பதைக்கவிட்டு
கூடு விட்டுப் போனாயோ.

அன்பு மகள்
கண்ணம்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாவது பேரனின் பிறந்த தினத்தில் சம்பந்தி குடும்பத்தினருடன்



முருகன் ஆலய பரிபாலன சபைச் செயலாளராக இருந்தபோது



பண்ணாகம் அண்ணா கலை மன்றம் அன்னாருக்குச் செய்த
பொன்விழாவின் போது தனது குடும்பத்தினருடன்



பாடசாலைகளில் நிகழ்த்தப்பட்ட
சமயச் சொற்பொழிவின் போது



அன்னாருக்கு நடத்தப்பட்ட பாராட்டு
விழாவின் போது மனையாளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசகுரு என்றென்றும் இங்கேயும் வாழ்வார்

பண்ணாக மண்ணிலே
பலர்புகழ வாழ்ந்த
பண்டிதர் இராசகுரு
பிரசித்த நொத்தாரிஸ்
பிறர் மெச்சும் பண்புடையார்

சங்கத் தமிழ் முழுதும்
பங்கமற கற்றறிந்தார்
ஐவகை இலக்கணமும்
தொய்வின்றிச் சொல்லும்
பொய்கலவாப் புண்ணியனே

நகைச் சுவையும் கவிச்சிறப்பும்
நளினமாய் இணைந்ததினால்
வியக்க வைக்கும் பேச்சாளர்
விசுவத்தனையான் முன்னாலே
உருக்கமுடன் ஓதுவார்

புராணப் படிப்பினிலே
பொருந்தி பொருளுரைப்பார்
விவாதத் தலைப்பென்றால்
வெட்டொன்று துண்டு இரண்டு
கவியரங்கும் கலக்குவார்

மேடைப் பேச்சென்றால்
கோடை வெய்யில் போல
கொழுத்தி எரிப்பார்
உறங்குபவன் நாடிநரம்பினிலே
நல்லரத்தம் ஓடத்தொடங்கும்

மொழியோடும் இனத்தோடும்
முற்றாகச் சங்கமித்து
கொள்கைப் பிடிப்புடனே
கூட்டணியில் நாட்டமுற்று
அரசியல் மேடையெல்லாம்
ஆவேகக் குரல் கொடுத்தார்

தருமக் குணமுடையார்
தவித்தோரை ஆதரிப்பார்
பொறுமைக்கும் இவருக்கும்
பொருந்தமென்பதில்லை
கொடுமை கண்டால்
கொதித்து எழுவார்
நீதிக்கும் நேர்மைக்கும்
பாதிப்பெனில் படையெடுப்பார்

மல்லிகைப் பூவாக மணம் வீசும்
மல்லிகாவால் சிறப்பெல்லாம் பெற்று
கண்ணா கண்ணா என்றழைத்துக்
கண்ணாய் மதித்த மகளுக்கு
கருத்தில் நிறைந்த கணவனையே
பொருத்தமாக இணைத்து வைத்து
பேரப்பிள்ளைப் பேறு கண்டார்

பெறுமவற்றுள் எல்லாமே பெற்று
இறைவனடி சென்றடைந்த
இராசகுரு என்றென்றும்
இங்கேயும் வாழ்வார்.

ராணி சீதரன் BA. (Hons) M Ed
ஆசிரியா ஆலோசகர்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் நினைவில் இருக்கும் பண்டிதர் இராசகு அவர்கள்

பண்டிதர் இராசகுருவை 1961ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணங்களை உறுக்கிய புகழ்பெற்ற கச்சேரி முன் நடைபெற்ற சத்தியாகிரகத்தில் சந்திக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது. அப்போது பல்கலைக்கழக மாணவராக தெரிவு செய்யப்பட்டும், பல்கலைக்கழகத்தின் கல்வியாண்டு தொடங்காததால் சத்தியாக் கிரகத்தில் தாராளமாகப் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது. அன்று தொடக்கம் அரை நூற்றாண்டுக்கு மேலாக அவருடனான நமது நட்புத் தொடர்ந்தது.

சிறந்த தமிழ்ப்புலமைமிக்கவர் ஆற்றல்மிக்க பேச்சாளர் கருத்தரங்குகள், விவாத மேடைகள் ஆகியவற்றில் பங்குபற்றித் தமது திறமையை வெளிக் கொணர்ந்தவர். இவற்றிற்கும் மேலாக நாடகத்துறையிலும் அவருக்கு ஈடுபாடு உண்டு. தமிழே உயிர்' என வாழ்ந்த இவரிடம் தமிழ்த் தேசியம் குடி கொண்டிருந்ததில் ஆச்சிரியமில்லை. அதுவும் வட்டுக்கோட்டை முதல்வர் தலைவர் அமிர்தலிங்கத்தின் கவர்சிமிக்க, உணர்ச்சிமிக்க பொருள் பொதித்த பேச்சுக்கள் பட்டி தொட்டி எல்லாம் தேசியத்தை எடுத்துச் சென்றகாலம். தலைவர் அவர்களின் பேச்சே ஒரு தனி ரகமானது. இவரது அரசியல் பணியில் மிக மிக இளவயதிலிருந்து தம்மை இனைத்துக்கொண்ட பண்டிதர் அவர்கள் 'நிழல்போல்' அவரது பணிகளைத் தொடர்ந்தவர். தமிழ்த் தேசியத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றியவர்.

தானுண்டு குடும்பமுண்டு என்பது இன்று பலரது சிந்தனையிலும் வேருன்றி விட்டது. ஆனால் பண்டிதர் அவர்கள் இதற்கு விதி விலக்கானவர். குடும்பத் தலைவனாக இருந்து குடும்பத்திற்கு ஆற்றவேண்டிய பொறுப்புக்களைக் கண்ணியமாகவும் கச்சிதமாகவும் நிறைவேற்றி வைப்பதில் மட்டும் திருப்தி கொள்ள வில்லை. ஊர் மக்கள் பணியே தமது நிலையான பணி எனக்கொண்டு சமூக சேவைக்குத் தம்மை அர்ப்பணித்தவர். தொண்டே மனித வாழ்வின் லட்சியம் என்ற பொருள்பட வாழ்ந்தவர். ஊரில் இவர் கைபடாத சங்கங்களே இல்லை எனலாம்.

இவற்றுக்கப்பால் தமது ஜீவனோபாயத்திற்குரிய நொத்தாரிசு தொழிலையும் மிகவும் கண்ணியத்துடன் நடாத்தியவர். நேர்மையே இவரது இலட்சியமாக இருந்ததால் இதிலே எத்தனையோ சுத்துமாத்துக்கள் மூலம் வருவாயைப் பெருக்க வாய்ப்பிருந்தும் அது பற்றி இம்மியளவேனும் சிந்திக்காதவர். இவரது நேர்மை, தொழிலுக்குரிய மகத்துவம் ஆகியன பலராலும் போற்றப்பட வேண்டியவை.

கடைசி காலத்தில் மனைவியை இழந்த நிலையில் நோய்வாய்ப்பட்ட நேரத்தில் சுயமாக இயங்கும் சக்தியை இவர் இழந்தார். அப்போதும் கூட எதுவித முணமுணுப்புமின்றி 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஆன்றோரின் வாக்குக்கு அமைய இவரைப் பேணி எதுவித குறையுமின்றி போற்றிய இவரது அருமை மகள், மருமகன் ஆகியோரது பணிகள் எல்லோருக்கும் முன்னுதாரணமாக விளங்க வேண்டியவை. காரணம் இக்காலத்தில் வயது வந்த பெற்றோர் பல கருணை இல்லங்களில் வாழும் நிலையை நாம் காணுகின்றோம். வசதி படைத்தவர் பலரின் வாழ்வு இவ்வாறு காணப்படுகிறது.

இருந்தும் எதுவித குறையுமின்றி, நிறைவாக வாழ்ந்து, மகிழ்ச்சியான குடும்பத் தலைவனாக வாழ்ந்து, தமக்கும் தாம் வாழ்ந்த மக்களுக்கும் பணி செய்து நம்மை விட்டுப்பிரிந்த பண்டிதர் அவர்களின் வாழ்வு போற்றத்தக்கது. மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அமைவது இதனால் அவரது நினைவும் என்றும் வாழும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்காது.

**பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்**
சிரேஷ்ட துணைத் தலைவர்
இலங்கைத் தமிழரசுக்கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை போகாத வீரன்

பண்ணாகம் பெற்றெடுத்த கல்விமான்களிலே சமகாலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சரித்திரம் படைத்த சான்றோர் சமத்துவம் பாராட்டிய ஆன்றோர் அன்பார்ந்த பண்டிதர் பரமகுரு இராசகுரு அவர்கள் எனது முதல் மரியாதைக்குரியவர்கள்.

இந்த நூற்றாண்டின் இடைக்காலப்பகுதியில் நம்மிடையே நயமுடன் வாழ்ந்து நன்மை பல செய்து மறைந்தவர் பெருமதிப்புக்குரிய புண்ணியமிக்க பெரியார். கண்ணியமிகு காந்திஜீவாதிரி உயர்திரு பரமகுரு அவர்கள். அந்தக் கொள்கை வீரனின் முதல் வாரிசு தான் இந்தத் தீரர் இராசகுரு என்பது பெருமைக் குரியது.

அன்றைய மாணவ சமூகத்தின் இலட்சியம் பொறியியலாளர்; இலக்கு டாக்டர், எதிர்பார்ப்பு கணக்காளர் என்னும் தொழில்சார் ஒருவர் 'பண்டிதர்' அகியதால் என்றால், அமுதினுமினிய அருந்தமிழில் அவருக்குள்ள ஆர்வத்தையும், ஆற்றலையும் அளவிடத்தான் இயலுமா!

வண்ணத் தமிழ்க் குரலோன் அண்ணல் 'அமிர்' நமது பெருமகனின் அடியொற்றி அவரது அரசியற் பாதையிலே பயணித்த பண்பாளர் எங்கள் பண்டிதர் கட்சிக்கூட்டம், கல்விக் கருத்தரங்கு, கவியரங்கம், பட்டிமன்றம், பா மண்டபம் என இவர் கைபாடத தறையும் இல்ல, கால்படாத மேடையும் இல்லை!

சமுதாய வளர்ச்சியை நோக்கிச் சமய விருத்தியையும் சமூக எழுச்சியையும் கருத்திலே கொண்டு இவர் ஆற்றிய அரும் பெரும் பணிகளை அணிவகுக்க வைத்தால் அப்பட்டியல் கட்டுக்கடங்காது!

அரசியல் அரங்கு என்றால், அதில் ஆவேசம் இருக்கும்; ஆனால் வேசம் இருக்காது, இலக்கிய மேடை எனின், அங்கே நயம் நிறையும், பயம் மறையும் இவ்வாறு அரசியலில் முழக்கம் செய்து, இலக்கியத்தில் விளக்கம் தந்து தமிழ்த் துறையிலே தமக்கெனத் தடம் பதித்தவர். தனியிடம் பிடித்தவர் பண்டிதர் அவர்கள்.

இவரிடம் திறமை, நேர்மை, பொறுமை என்னும் அணிகலன்கள் நிறைவேந்திருந்த போதிலும் இவரை அடையாளம் காணவைத்த எளிமையே இவருக்குப் பெருமை சேர்த்தது என்பது தான் உண்மை!

மதத்தொண்டு, மொழிச்சேவை இவற்றின் மத்தியிலும் நொத்தாரித் தேர்விலே தேறித் தொழிலிலும் சிறப்புற விளங்கினார். அதைத் தொடர்ந்து தன் மனங் கவர்ந்த மங்கை செல்வி. கதிரவேலு மல்லிகாதேவிக்கு மாவையிட்டு மனையாளாக்கி இனிதே இல்லறம் ஆற்றினார்!

எதிர்பாராத வகையிலே தமது துணைவியின் அதிர்ச்சிமிக்க மரணத்தைத் தொடர்ந்து மனத்துயரடைந்தார். உள்ளத்தின் வருத்தம் உடலையும் பாதித்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் பேரதிர்ச்சி காரணமாக உடல்நிலை தளர்ச்சி காணத் தொடங்கியது. நாளுக்கு நாள் நோயின் கொடுமை அதிகரித்த போதிலும், அன்னாரின் ஒரே புதல்வியும் அவரது கணவரும் அவ்வப்போது அயராது பராமரித்து எடுத்த மருத்துவமும் கொடுத்த மருந்தும் வியாதியின் வேதனையை ஓரளவு தடுத்தன என்றே சொல்ல வேண்டும்!

மருத்துவம் என்பது சுகத்தைத் தான் தருமே தவிர, வயதைத் தராது. எத்தனையோ உறுதிகளின் எல்லை வகுத்த நொத்தாரிசுப் பண்டிதரின் இறுதியை எல்லாம் வல்ல இறைவன் அறுதியாக எல்லைப்படுத்தி விட்டான்!

மதப்பற்று, மொழியுணர்வு இரு வழிகளையும் தமது விழிகளாக்கிச் சமூக சேவை புரிந்து, சட்டத்துறையிலே பணியாற்றி ஊருக்குப் பெருமை சேர்த்தவர். மறைந்தும் மறையாத அமரர் பண்டிதர் இராசகுரு அவர்கள்.

என்னைப் பொறுத்தளவில் இவர் எனக்கு அன்பான அண்ணர், அறிவான நண்பர், அற்புதமான ஆசிரியர், அருமையான ஆலோசகர், அக்கறையான அயலவர், அதற்கு மேல், அரசியலில் அலை அடித்தாலும், மலை வெடித்தாலும் நிலை இடிந்தாலும் விலை போகாத வீரன்!

**சோம திருச்செல்வன்**
**பண்ணாகம்**

# ஊரின் கலங்கரை விளக்கு

எமது ஊரிலே 'கலங்கரை விளக்குப்போன்று வாழ்வாங்கு வாழ்ந்து மடிந்த எனது அத்தான் எங்கள் எல்லோரையும் விட்டு பிரிந்து விட்டார் என்ற செய்தி பெரிதும் கவலை தந்தது. பிள்ளை இல்லாத காலம் முதல் பிள்ளை பிறந்த காலம் வரை என்னையும் ஒரே பிள்ளை போன்று வளர்த்து பிடித்ததெல்லாம் வேண்டித் தந்தார் அக்கா இறந்த பின் நான் இங்கிருந்து வீடு வந்த போது எங்கள் கௌரி வந்து விட்டது என்று கனிவுடனே சிரித்தார். இப்படியான ஓர் தந்தை போன்று என்னை வளர்த்த ஆத்மா எல்லாம் வல்ல விசவத்தனை முருகனின் பாதங்களில் சென்றடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**மகள் கௌரி திருக்குமார்**
**குடும்பத்தினர்**
**(சுவிஸ்)**

**பண்ணாகம்,**
**சுழிபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணாகம் அண்ணா கலை மன்ற பொன்விழா மலரிலிருந்து

பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தை உருவாக்கிய மூலகர்த்தா பண்டிதர் திரு. ப. இராசகுரு அவர்கட்கு பொன்விழா நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சி, சைவசமயப்பணி, சமூகப்பணி, தமிழ்ப்பணி புரிந்தவருமான இப்பெருந்தகையை அவர் வாழ்நாளிலேயே கௌரவிப்பது தான் மிகப்பொருத்தமானதும், உகந்ததுமாகும்.

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்
நல்லை ஆதீனம்

பண்ணாகம் என்று சொல்லியவுடன் பண்டிதர் ப. இராசகுரு அவர்களுடைய நாமம் இணைந்து எமது செவியில் ஒலிக்கிறது. ஒரு ஊரின் பெருமை அவ்வூர் வாழ் சான்றோர்களால் உயர்த்தப்படுகிறது.

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்

ஒருவில், ஒருஇல், ஒருசொல் என்று வாழ்ந்த கம்பராமனைப்போல் தான் கொண்ட கொள்கைக்கு "ஏகபத்தினி விரதனாய்" இருக்கும் இயல்பினர் அதனால் பல சோதனை கண்டும் தளராதவர். தமிழை நேசித்ததால் இளமை குன்றாதவர்.

அன்பன்
இ. ஜெயராஜ்
கம்பன் கழகம்

பண்ணாகம் தமிழ்த் தேசியத்தோடு இரண்டறக் கலந்த கிராமம். இப்பணியில் வளர்ந்து வாழ்ந்து வரும் பண்டிதர் இராசகுரு பற்றி விரித்துக் கூறுவது அவசியமில்லை அவர் ஒரு தமிழ்த்தேச பக்தர் தமிழைப் பற்றிச் சிந்தித்துப்பேசி எழுதித் தமிழ்ப்பணி ஆற்றும் இவர் நாளும் பொழுதும் தமிழுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்.

சி. க. சிற்றம்பலம்
தலைவர்
வரலாற்றுத்துறை யாழ் பல்கலைக்கழகம்

பண்டிதர் ப. இராசகுரு அவர்கள் இது காலவரையில் ஆற்றிய சமுதாயப் பணிகளுக்கு நன்றி தெரிவிக்குமுகமாகவும், அவரால் இன்னும் ஆற்றப்பட்ட வேண்டிய பணிகள் சிறப்புற அமைய ஊக்குவிக்கும் முகமாகவும் பண்டிதர் அவர்களுக்கு பொன்விழா எடுக்க இருப்பதைக் கேள்வியுற்று உவகையடைகிறேன்.

திரு. கா. நடராசா B.A. (Cey) Dip in Edu,
அதிபர்
பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

பண்டிதர் அவர்கள் தனது இளமைக்காலத்தில் அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து பொருள் தேடி இருக்கலாம் ஆனால் அவர் பொருள் ஆசை குறைந்தவர். ஆடம்பத்தை விரும்பாதவர், சீதன மோகம் குறைந்தவர்.

பரிபாலன சபை
பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மை, கண்ணியம், தன்னலம் கருதாசேவை, விவேகம், ஒழுக்கம், மானம், கடமையுணர்வு பண்டிதர் உடைய அணிகலன்கள்.

மேலும் பணிவு, தமிழிலும், சைவத்திலும் புராணப் படிப்பிலும் உள்ள ஈடுபாடு, அன்புடன் உபசரிக்கும் உயர்வான பண்பு, எடுத்த விடயத்தை முடிக்கும் திறன் அவர்களது மேலதிக சிறப்பம்சங்களாகும்.

**சி. க. திருச்சிற்றம்பலம்**
**ஈழநாடு பொதுமுகாமையாளர்**

பண்டிதர் இராசகுரு அவர்கள் துடிப்பான இளைஞர் எடுத்த காரியத்தை தொடுத்து நடத்துவதில் எவ்வித இடர்ப்பாடுகள் ஏற்பட்டாலும் அதனைச் துச்சமெனக் கொண்டு துணிந்து செயலாற்றுபவர்.

**சுழிபுரம்**

**பண்டிதை பொன். பாக்கியம்**
**ஆசிரியர்**

பண்ணாகம் அண்ணா கலை மன்ற ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும், சமய, சமூக, தமிழ்ப்பணிகள் பல புரிந்து சிறந்த பேச்சாளராகவும் விளங்கும் பண்டிதர் திரு. ப. இராசகுரு அவ்களின் பொன்விழாவை நடாத்தி பட்டமளித்து கௌரவிக்கும் வைபவத்தையொட்டி வெளியிடும் சிறப்பு மலருக்கு எங்கள் வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் நாம் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

**பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்**

மனிதனாகப் பிறந்தவர்களுக்குச் சிறந்த பாக்கியம் பிறருக்கு சேவை செய்வதில் நிறைவு பெறுகிறது. இன்று பொன்விழாக்காணும் பண்ணாகம் கிராமத்தின் தவப்புதல்வனாகப் பிறந்த பெருமைக்குரிய பண்டிதர் திரு. ப. இராசகுரு அவர்கள் "தோன்றிப் புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கமைய தோன்றியவர். இத்தகையவர் வாழ்வில் முன்மாதிரியாக தனது நேரத்தைச் சமூக, சமய, கல்விப் பணிக்கு நல்கிய பெருமைக்குரியவர். நமது கிராமத்திலும் சரி அயற் கிராமங்களிலும் இவரின் நாவன்மையையும் அழ்ந்த கருத்துக்களையும் கேட்டு புகழ்ந்துரைக்காதவர் இல்லையெனலாம்.

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

**பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்**

பண்டிதர் என்றால் எமது ஊரில் மட்டுமல்ல அயலூர்களிலும் தெரியாதவர் இருக்கவே முடியாது தெள்ளு தமிழில் பண்டிதர் அவர்கள் உரையாற்ற ஆரம்பித்தா ரென்றால் மகுடி கேட்ட நாகம் போல சிறியோர் முதல் பெரியோர் வரை மயங்குவதை எவராலும் மறக்கவே முடியாது மேடைகளில் தனது பேச்சு வன்மையால், கவித்திறனால் மக்களைக் கவரும் பண்டிதர் ப. இராசகுரு அவர்கள் எமது கிரமத்திற்கு இறைவனால் கிடைத்த கொடை என்றே கூற வேண்டும்.

**விசவத்தனை வீதி,**
**பண்ணாகம், சுழிபுரம்**

**பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக**
**சேவா வாலிபர் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில்
பரிபாலன சபையின்

# கண்ணீர் அஞ்சலி

உதயம்
20 - 10 - 1940



அஸ்தமனம்
10 - 04 - 2013

"சொல்வேந்தன்" "பண்டிதர்"

## அமரர் திரு. பரமகுரு இராசகுரு

*(பிரசித்த நொத்தாரிசு, பண்ணாகம்)*

அமரர் பண்டிதர் ப. இராசகுரு அவர்கள் எமது ஊரின் கோவில் பரிபாலன சபையில் அங்கம் வகித்தது மட்டுமல்லாமல் நிர்வாக சபையில் செயலாளர் பதவி வகித்து சபை வளர்ச்சியில் ஆர்வமுடன் செயற்பட்டார். அன்னார் சமய வளர்ச்சியில் மட்டும் நில்லாமல் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர் அவர் எமதூரின் பண்டிதர் படிப்பில் இரண்டாவதாக எமதூருக்குப் பெருமை சேர்த்தவர் ஆவர். இவர் சிறந்த தமிழ்த சமய செற்பொழிவாளர் மட்டுமல்லாமல் சிறந்த தர்க்கவாதியாக பல பொது நிகழ்வுகளில் தம்மை நிலைநிறுத்தியவர் அத்தோடு பல பொது அமைப்புகள் பலவற்றின் பல பதவிகளை வகித்து தமது சேவைத் திறமையை நிலைநாட்டியவர் அன்னாரின் இழப்பு எமது கிராமத்திற்கு பேரிழப்பாகும் பண்டிதர் அவர்களை பிரிந்து தவிக்கும் உற்றார் உறவினர் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது குல தெய்வமான விசவத்தனை வேலவனை இறைஞ்சுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் பிரிவால் துயருறும்
**கோவிற் பரிபாலன சபை**

பண்ணாகம்
10-04-2013

---

பண்ணாகம் தெற்கு
ஐக்கிய நாணய சங்கத்தின்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
20 - 10 - 1940



உதிர்வு
10 - 04 - 2013

## பண்டிதர் திரு. பரமகுரு இராசகுரு

*(பிரசித்த நொத்தாரிசு, பண்ணாகம்)*

அன்னார் எமது சங்கத்தின் நீண்டகால அங்கத்தவர் ஆவர். இவர் சங்கத்தின் நிர்வாக சபையிலிருந்து சங்க வளர்ச்சியில் சேவைபுரிந்ததோடு பல பொது அமைப்புக்களில் அங்கம் வகித்தது மட்டுமல்லாமல் எமது சங்கத்தின் கடன் வழங்கும் போது சங்க பாதுகாப்பிற்காக ஈட்டுறுதி குறைந்த கட்டணத்தோடு எழுதி நீண்டகாலம் உதவியவர் அன்னாரின் இழப்பு எமது சங்கத்திற்கு மட்டுமல்லாது எமது ஊருக்குமே பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விசவத்னை பதியுறையும் முருகனை இறஞ்சுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் பிரிவால் துயருறும்
**பண்ணாகம் தெற்கு**
**ஐக்கிய நாணய சங்கம்**

பண்ணாகம்,
சுழிபுரம்.
10-04-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிதல்

தாசன் கல்வி நிறுவன உரிமையாளரான முருகதாஸ் அவர்களின் மாமனாரான

# பண்டிதர் திரு. பரமகுரு இராசகுரு





புன்னகைக்கு விலையின்றி - சிரித்த
முகத்துடன் அன்பு செலுத்தும் தங்கள்
செய்கை எங்கு தானோ
மண்ணிற் பிறந்த மாந்தரெல்லாம்
மண்ணிலே மறைகின்றபோது
மனிதர் மறவாத் தந்தையா மறைந்து சென்றாய்
படைத்தவன் அன்பு கொண்டு பறித்திட்டான்
நாம் பதைக்கின்றோம உம்மை எண்ணி

மலர்ந்த முகமும் மறையாத பண்பும்
கவர்ந்த வரவேற்பும் கருணை உள்ளமும்
கண்களிற் காட்சியாய் கதை கூறி எடுத்தாரே கடவுள்
நினைத்துப் பார்க்கின்றோம் நெஞ்சம் ஒரு
கணமும் பொறுக்குதில்லை தந்தையே!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்
20-10-1940

மறைவு
10-04-2013

அன்னாரின் பிரிவால் துயருறும்
**தாசன் கல்வி நிறுவனம்**
**பண்ணாகம்**

---

# விழிநீர் சொரிதல்

தாசன் கல்வி நிறுவன உரிமையாளரான முரகதாஸ் அவர்களின் மாமனாரான

# அமரர்.பரமகுரு இராசகுரு



புன்னகைக்கு விலையின்றி - சிரித்த
முகத்துடன் அன்பு செலுத்தும் தங்கள்
செய்கை எங்கு தானோ
மண்ணிற் பிறந்த மாந்தரெல்லாம்
மண்ணிலே மறைகின்றபோது
மனிதர் மறவாத் தந்தையா மறைந்து சென்றாய்
படைத்தவன் அன்பு கொண்டு பறித்திட்டான்
நாம் பதைக்கின்றோம் உம்மை எண்ணி

மலர்ந்த முகமும் மறையாத பண்பும்
கவர்ந்த வரவேற்பும் கருணை உள்ளமும்
கண்களிற் காட்சியாய் கதை கூறி நிற்க
கணப்பொழுதில் தம் கரம் எடுத்தாரோ கடவுள்
நினைத்துப் பார்க்கின்றோம் நெஞ்சம் ஒரு
கணமும் பொறுக்குதில்லை தந்தையே!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

தோற்றம்
20.10.1940

மறைவு
10.04.2013

அன்னாரின் பிரிவாற் துயருறும்
தாசன் கல்வி நிறுவனம்
பண்ணாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் இதயத்தில் நீ...

உதயம்
20
–
10
–
1940



அஸ்தமனம்
10
–
04
–
2013

"சொல்வேந்தன்" "பண்டிதர்"

## அமரர் திரு. பரமகுரு இராசகுரு

(பிரசித்த நொத்தாரிசு, பண்ணாகம்)

பண்ணாக மண்ணுக்கு
பார் எங்கும் புகழ் சேர்த்த
பண்டிதரே எங்கள் அண்ணா

சொல்வேந்தன் எனும் நாமம் சூடி
சொற்போர் பல நிகழ்த்தி
ஊர் கூட்டிய உத்தமரே

மன்றம் எனும் சேர் அசைந்து
மக்கள் பணி தொடர
அறுபத்தொன்பதில் அச்சாணி இட்டவரே

தமிழின் அரிச்சுவடியை தடையின்றி கற்று
தரணியில் நாம் உயர
காரணியாய் இருந்து
அண்ணாவின் பெயரிலே
கல்விக்கோர் அறிவாலயம் இட்டவரே
எங்கள் இராசகுரு அண்ணாவே.

மரணம் வாழ்வின் முடிவல்லஎன
வாழ்ந்து காட்டி
என்றும் எம் மனங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கும்
எங்கள் அண்ணாவுக்கு
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய
விசவத்தனை வேலவனை இறைஞ்சுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பண்ணாகம்
11-04-2013

அன்னாரின் பிரிவால் துயருறும்
**தம்பியர் குழாம்**

---

"கடமை கண்ணியம் கட்டுப்பாடு"

பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தின்

# கண்ணீர் அஞ்சலி

உதயம்
20
–
10
–
1940



அஸ்தமனம்
10
–
04
–
2013

"சொல்வேந்தன்" "பண்டிதர்"

## அமரர் திரு. பரமகுரு இராசகுரு

(பிரசித்த நொத்தாரிசு, பண்ணாகம்)

இவரது தந்தையார் மாரிமுத்து பரமகுரு அவர்கள் காந்திய வழியில் தமது வாழ்க்கையை மேற்கொண்டதுடன் பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்திற்கு ஒரு கட்டடம் அமைப்பதற்கு அக்காலத்தில் பிடியரிசி மூலம் நிதி சேகரித்து முருகன் ஆலயத்தின் முன் மண்டபத்தின் வடக்கே வாசிகசாலைக்கான கட்டிடத்தை கட்டுவித்தார். தந்தையின் கொள்கைகளில் பற்றுக் கொண்ட மகனார் 1969ஆம் ஆண்டு காந்தி நூற்றாண்டு விழாவை வழக்கம்பரை அம்மன் ஆலய வீதியில் ஏற்பாடு செய்து அதில் நடிகமணி வைரமுத்துவின் மயானகண்டம் என்ற சரித்திர நாடகத்தை மேடை ஏற்றுவதற்கும் ஊரிலுள்ள சில இளைஞர்களுடன் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தார் இதை தவிர்க்கமுடியாத காரணத்தால் மேடையேற்ற முடியவில்லை இதனால் மனமுடைந்த அமரர் அவர்கள் அடுத்தநாள் சில இளைஞர்களுடன் சேர்ந்து பண்ணாகம் அண்ணா கலை மன்றம் என்ற பெயரில் வழக்கம்பரை அம்மன் கோவில் அருகாமையில் அந்த நாடகத்தை மேடையேற்றினார் அதன் மூலம் எமது மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அத்தோடு எமது மன்றத்தைப் பல காலம் தலைவர் பதவி வகித்து மன்றத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றதுடன் இன்று வரை மன்றக் காப்பாளராக இருந்து எமக்கு ஆலோசனைகள் வழங்கிவந்துள்ளார்.

அமரர் இராசகுரு அவர்கள் இளம்பராயத்தில் எமது ஊரவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களுடன் சேர்ந்து தமிழ் இனத்தின் விடிவுக்காக பாடுபட்டவராவர்.

அமரர் அவர்கள் சொற்பொழிவு ஆற்றும் பொழுது மடை திறந்த வெள்ளம் போல அழகிய தமிழில் சபையைக் கவரும் விதத்தில் எத்துறை சார்ந்தும் பேசும் பேச்சாற்றல் பெற்ற ஒருவராவர். அத்துடன் விவாத அரங்குகள் வழக்காடு மன்றங்கள் கவிதை அரங்கங்கள் என்பவற்றில் பங்குபற்றியதோடு அவற்றைத் தலைமைதாங்கியும் நடத்தினார். அத்தோடு ஆலயங்களில் புராண படனங்களுக்கு மக்களைக் கவரும் விதத்தில் உரை சொல்லுவதிலும் வல்லவராவர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விசவத்தனை முருகன் வீதி,
பண்ணாகம்.
10-04-2013

அன்னாரின் பிரிவால் துயருறும்
**பண்ணாகம் அண்ணா கலை மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## எமது குடும்பத்தின் அணையா விளக்கு
## அமரர். திரு. பரமகுரு இராசகுரு

அவர்கள் விசுவத்தனை வேலவனின் பாதார விந்தங்களை அடைந்ததையிட்டு அவரது இறுதிச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டும், இரங்கல் செய்தி அனுப்பி வைத்தும், கடிதம், தந்தி, தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர் களுக்கும், இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் தோழ்கொடுத்த தோழர்களுக்கும், நிகழ்வை நெறிப்படுத்தியவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், பத்திரிகையினூடாக இரங்கல் செய்தி பிரசுரித்த மாவட்ட செயலக காணிப்பதிவகத்தினருக்கும் எமது அன்பு நிறைந்த நன்றிகள்.

எமது அழைப்பை ஏற்று வருகைதந்து இன்று நடைபெற்ற அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் அந்நிகழ்வுகளுக்கு உதவி புரிந்தவர்களுக்கும் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்தவர்களுக்கும் இந்நூலுக்கு இரங்கலுரைகள் வழங்கிய கௌர பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், தமிழ் அறிஞர்கள், ஆன்மீக பெரியோர்கள், உறவினர்கள், மற்றும் பெருந்தகைகள் அனைவருக்கும் இம்மலரை சிறப்பான முறையில் அச்சிட்டு உதவிய சங்கானை திருமொழி அச்சகத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

மேலும் நோய்வாய்ப்பட்ட எம் தந்தைக்கு சகல விதத்திலும் உதவியவர்களுக்கும், மூளாய் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும், யாழ் போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் இறுதி நேரத்தில் அவரை வந்து பார்த்து ஆறுதல் கூறியோருக்கும் அன்னாரின் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.
வணக்கம்.

இங்ஙனம்
**மகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்.**

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தா. திருநாவுக்கரசு
அமரர் அவர்களை பாராட்டி உரையாற்றும் போது



அமரர் பண்டிதர் ஆனதை முன்னிட்டு நடந்த விழாவில்
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தலைமை உரை ஆற்றும்போது



எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம்
அமரர் அவர்களை பாராட்டி உரையாற்றும் போது



கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை
நொத்தாரிசு காரியாலய திறப்பு விழாவில் உரையாற்றும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி இலக்கணம்

தரம் 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை தமிழ் மொழிப்பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களுக்குமான சிறந்த வழிகாட்டி



தொகுப்பு

**M. A. முருகதாசன்**

*B.A (Hons) Tam. Spc.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


- எழுத்து.
  எழுத்து வகை.
  எழுத்தின் பரம்பல்.
- புணர்ச்சி.
  புணர்ச்சி வகை.
- பதம்.
  பதப்பாகுபாடு.
- சொல்.
  சொற்பாகுபாடு.
- பெயர்ச்சொல்.
  பெயர்ச் சொல் வகை.
- வினைச்சொல்.
  வினைச்சொல் வகை.
- இடைச்சொல்.
- உரிச் சொல்.
- இலக்கிய வழக்கு சொற்பாகுபாடு.
- இருவகை வழக்கு.
- வாக்கியம்.
  வாக்கியவகை.
  வாக்கிய உறுப்புக்கள்.
- தொடர்கள்.
- வழூக்கள்.
- அணிகள்.
- நிறுத்தற் குறியீடுகள்.

## எழுத்து

1. எழுத்து என்றால் என்ன?
மொழிக்கு முதல் காரணமாகிய ஒலியின் வரிவடிவம் எழுத்து எனப்படும்.

2. தமிழ் எழுத்துக்களை எத்தனை வகையாக பிரிப்பர்?
நான்கு வகையாக.

3. அவை எவை? எத்தனை எழுத்துக்கள்?
அ- உயிர் எழுத்து – 12
ஆ- மெய் எழுத்து – 18
இ - உயிர் மெய் எழுத்து – 216
ஈ - ஆய்த எழுத்து – 01

4. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள் எத்தனை?
247.

5. பன்னிரண்டு உயிர் எழுத்தையும் எத்தனை வகையாக பிரிப்பர்?
2 வகையாக.

6. அவை எவை?
குறில் எழுத்துக்கள், நெடில் எழுத்துக்கள்.

7. குற்றெழுத்து என்றால் என்ன? (குறில் எழுத்து )
குறுகிய ஓசையுடைய எழுத்துக்கள் குற்றெழுத்துக்கள் ஆகும்.

8. குறில் எழுத்துக்கள் எவை?
அ, இ , உ, எ, ஒ எனும் ஐந்தெழுத்துக்கள் ஆகும்.

9. நெட்டெழுத்து என்றால் என்ன?
நீண்ட(நெடிய) ஓசையுடைய எழுத்துக்கள் நெட்டெழுத்தாகும்.





10. நெடில் எழுத்துக்கள் (நெட்டெழுத்துக்கள்) எவை?
ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ எனும் ஏழும் நெட்டெழுத்தாகும்.

11. மாத்திரை என்றால் என்ன?
கண்ணிமைப்பொழுது அல்லது கைநொடிப்பொழுது மாத்திரை ஆகும். அதாவது எழுத்துக்கள் ஒலிக்க எடுக்கும் கால அளவு மாத்திரை எனப்படும்.

12. குற்றெழுத்திற்கான மாத்திரை எத்தனை?
ஒரு மாத்திரை.

13. நெட்டெழுத்திற்கான மாத்திரை எத்தனை?
இரண்டு மாத்திரை.

14. மெய்யெழுத்து பதினெட்டையும் எவ்வாறு வகுக்கலாம் ?
வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாக வகுக்கலாம்.

15. வல்லினம் என்றால் என்ன?
வலிய ஓசையுடைய எழுத்துக்கள் வல்லினம் எனப்படும்.

16. வல்லின எழுத்துக்கள் எவை?
க், ச், ட், த், ப், ற் எனும் ஆறு எழுத்துக்களாகும்.

17. மெல்லினம் என்றால் என்ன?
மெல்லிய ஓசையுடைய எழுத்துக்கள் மெல்லினம் ஆகும்.

18. மெல்லின எழுத்துக்கள் எவை?
ங், ஞ், ண், ந், ம், ன் எனும் ஆறு எழுத்துக்களும் ஆகும்.

19. இடையினம் என்றால் என்ன?
வல்லினத்திற்கும் மெல்லினத்திற்கும் இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துக்கள் இடையின எழுத்துக்களாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.இடையின எழுத்துக்கள் எவை?
ய், ர், ல், வ், ழ், ள் எனும் ஆறு எழுத்துக்களும் ஆகும்.

21.மெய் எழுத்திற்குரிய மாத்திரை எத்தனை?
1/2 மாத்திரை ஆகும்.

22.முதல் எழுத்துக்கள் எத்தனை?
முப்பது.

23.முதலெழுத்துக்கள் எப்படி உருவாகின்றன?
உயிரெழுத்துப் பன்னிரன்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் சேர்ந்து உருவாகின்றது. (12 + 18 = 30)

24.உயிர் மெய் எழுத்துக்கள் எவ்வாறு உருவாகின்றன?
உயிர் எழுத்துப் பன்னிரன்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் புணர்ந்து உருவாகின்றது. (12 x 18 = 216)

25.ஆய்த எழுத்து எது?
ஃ

26.ஆய்த எழுத்து மொழியில் எங்கு பயன்படுத்தப்படும்?
சொல்லின் நடுவில் மட்டுமே அமையும்.
உ-ம் எஃகு, அஃது, நுஃமான்.

27.உயிர் மெய்யெழுத்துக்களை எவ்வாறு வகுக்கலாம்?
வல்லின உயிர்மெய் எழுத்துக்கள், மெல்லின உயிர்மெய் எழுத்துக்கள், இடையின உயிர்மெய் எழுத்துக்கள் என மூன்றாக வகுக்கலாம்.

28.வல்லின உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை?
72.





29.வல்லின உயிர் மெய் எழுத்துக்கள் எவ்வாறு உருவாகின்றன?
வல்லின மெய் எழுத்துக்கள் ஆறினோடும் உயிர் எழுத்துப் பன்னிரெண்டும் புணர்ந்து உருவாகின்றன. (6 x 12 = 72)

30.மெல்லின உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை?
72.

31.அவை எவ்வாறு உருவாகின்றன?
மெல்லின மெய் எழுத்துக்கள் ஆறினோடும் உயிர் எழுத்துப் பன்னிரெண்டும் புணர்ந்து உருவாகின்றன. (6 x 12 = 72)

32.இடையின உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை?
72.

33.அவை எவ்வாறு உருவாகின்றன?
இடையின மெய் எழுத்துக்கள் ஆறினோடும் உரெழுத்துப் பன்னிரெண்டும் புணரும்போது உருவாகின்றன. (6 x 12 = 72)

34.உயிர் மெய் குற்றெழுத்துக்கள் எவ்வாறு உருவாகின்றன?
உயிர்க் குற்றெழுத்து 5 உடனும் 18 மெய் எழுத்தும் புணரும்போது உருவாகின்றன.

35.உயிர் மெய் குற்றெழுத்துக்கள் எத்தனை?
90. (18 x 15)

36.உயிர் மெய் நெட்டெழுத்துக்கள் எவ்வாறு உருவாகின்றன?
உயிர்க் நெட்டெழுத்து 7 உடனும் 18 மெய் எழுத்தும் புணரும் போது உருவாகின்றன.

37.உயிர் மெய் நெட்டெழுத்துக்கள் எத்தனை?
126 (18 x 7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38.உயிர் மெய் குற்றெழுத்தின் மாத்திரை எத்தனை?
ஒரு மாத்திரை.

39.உயிர் மெய் நெட்டெழுத்தின் மாத்திரை எத்தனை?
இரண்டு மாத்திரை.

40.ஆயுத எழுத்திற்குரிய மாத்திரை எத்தனை?
1/2 மாத்திரை.

41.சுட்டெழுத்துகள் என்றால் என்ன?
ஒரு பொருளைச் சுட்டிக்காட்டுவதற்கு பயன்படும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் ஆகும்.

42.சுட்டெழுத்துக்கள் எவை?
அ, இ, உ என்பன சுட்டெழுத்துக்களாகும்.

43.சுட்டெழுத்தின் வகை யாவை?
அகச்சுட்டு, புறச்சுட்டு.

44.அகச்சுட்டிற்கு உதாரணம் தருக?
அவன், இவன், உவன், அது, இது, உது.

45.புறச்சுட்டிற்கு உதாரணம் தருக?
அம்மனிதன், இம்மனிதன், உம்மனிதன்,
அவ்வீடு, இவ்வீடு, உவ்வீடு.

46.சுட்டெழுத்துக்களை வேறு எவ்வாறு வகுக்கலாம்?
அண்மைச் சுட்டு , சேய்மைச் சுட்டு.

47.அண்மைச் சுட்டு எனப்படுவது யாது?
“இ”எனும் சுட்டெழுத்தை அடிப்படையாக கொண்டு அமையும் சுட்டு (கிட்ட உள்ளதைக் குறிப்பது)





48.அண்மைச் சுட்டிற்கு உதாரணம் தருக?
இவன் , இவர் , இவ்வீடு.

49.சேய்மைச் சுட்டு எனப்படுவது யாது?
“அ”எனும் சுட்டெழுத்தை அடிப்படையாக கொண்டு அமையும் சுட்டு (தூர உள்ளதைக் குறிப்பது)

50.சேய்மைச் சுட்டிற்கு உதாரணம் தருக?
அவன் , அவர் , அவ்வீடு.

51.“உ”எனும் எழுத்தை அடிப்படையாக கொண்ட சுட்டு எப்பிரிவினுள் அடக்கப்படும் ?
இது சேய்மைச் சுட்டினுள்ளும் இடைச்சுட்டு எனத் தனியாகவும் அடக்கப்படும்.

52.இடைச் சுட்டிற்கு உதாரணம் தருக?
உவன் , உவர் , உவ்வீடு.

53.வினா எழுத்துக்கள் என்றால் என்ன?
கேள்வியை ஆக்குவதற்குப் பயன்படும் எழுத்துக்கள் வினா எழுத்துக்கள் ஆகும்.

54.வினா எழுத்துக்கள் எவை?
எ, யா, ஆ, ஓ, ஏ, எனும் ஐந்து ஆகும்.
(“எ,யா முதலும் ஆ,ஓ ஈற்றும் ஏ இரு வழியும் வினாவாகுமே”)

55.மொழி முதலில் மட்டும் வினாப் பொருளை உணர்த்தி வரும் எழுத்துக்கள் எவை?
எ,யா எனும் இரு எழுத்துக்களும்.

56.உதாரணம் தருக?
எவன்? , யார்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57.மொழி இறுதியில் மட்டும் வினாப் பொருளை உணர்த்தி வரும் எழுத்துக்கள் எவை?
ஆ, ஓ எனும் இரு எழுத்துக்கள்.

58.உதாரணம் தருக?
அவனா? , அவனோ?

59.மொழியின் முதலில், இறுதியில் வினாப் பொருளை உணர்த்தி வரும் எழுத்து எது?
ஏ எனும் ஓரெழுத்து மட்டும்.

60.உதாரணம் தருக?
மொழி முதலில் - ஏன்?
மொழி இறுதியில் - அவனே?

61.வினா எழுத்துக்களை வேறு எவ்வாறு பிரிக்கலாம்?
அகவினா , புறவினா.

62.அகவினாவிற்கு உதாரணம் தருக?
யாவன்.

63.புறவினாவிற்கு உதாரணம் தருக?
யாங்ஙனம்.

64.உயிர் எழுத்துக்களில் இன எழுத்துக்கள் எவை?
அஆ, இஈ, உஊ, எஏ, ஒஓ, ஐஇ, ஔஉ.

65.மெய்யெழுத்துக்களில் இன எழுத்துக்கள் எவை?
க்ங , ச்ஞ , ட்ண், த்ந் , ப்ம் , ற்ன்.

66.இன எழுத்து அல்லாத எழுத்துக்கூட்டம் எது?
இடையினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05



67.மொழிக்கு முதலில் வரும் உயிரெழுத்துக்கள் எவை?
12 உயிரெழுத்தும்மொழிக்கு முதலில் வரும்.

68.மொழிக்கு முதலில் பன்னிரண்டு உயிரோடும் சேர்ந்து வரும் மெய்யெழுத்துக்கள் எவை?
க், ச், த், ந், ப், ம் எனும் ஆறு மெய் எழுத்துக்களும்.

69.வகர மெய் எத்தனை உயிரோடு மொழி முதலாக வரும்?
எட்டு உயிருடன்.

70.யகர மெய் எத்தனை உயிரோடு மொழி முதலாக வரும்?
ஆறு உயிருடன்.

71.ஞகர மெய் எத்தனை உயிரோடு மொழி முதலாக வரும்?
நான்கு உயிருடன்.

72.மொழிக்கு இறுதியில் வரும் உயிரெழுத்துக்கள் எவை?
எ தவிர்ந்த மிகுதிப் பதினொரு உயிரெழுத்தும் வரும்.
( எ அளபெடையில் மாத்திரம் வரும்)

73.மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துக்கள் எவை?
"ங்" உம் வல்லினமும் தவிர்ந்த பதினொரு எழுத்துக்களும்.

74.போலி எழுத்துக்கள் என்றால் என்ன?
ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்திற்கு பிறிதொரு எழுத்து அமைந்தாலும் பொருள் மாறுபாடின்றி ஒத்து நடப்பது போலி ஆகும்.

75.போலியை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
மூன்று வகையாகப் பிரிக்கலாம்

76.அவை யாவை?
மொழி முதற்போலி.
மொழி இடைப்போலி.
மொழி கடைப்போலி.

77.மொழி முதற்போலிக்கு உதாரணம் தருக?
ஐயர் – அய்யர்.
ஔவை – அவ்வை.

78.மொழி இடைப்போலிக்கு உதாரணம் தருக?
அமைச்சர் – அமச்சர்.
புடைவை – புடவை.

79.மொழி கடைப்போலிக்கு உதாரணம் தருக?
அகம் - அகன்.
பந்தல் - பந்தர்.

80.சார்பெழுத்து என்றால் என்ன?
சார்ந்து வருகின்ற எழுத்து சார்பெழுத்தாகும்.

81.சார்பெழுத்துக்கள் எத்தனை?
369.

82.சார்பெழுத்தின் வகை எத்தனை?
பத்து.

83.சார்பெழுத்தின் பத்து வகையினையும் தருக?
உயிர் மெய், முற்றாய்தம், உயிரளபடை, ஒற்றளபடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்.



06



84.சார்பெழுத்தின் பத்து வகையினையும் தந்து அவற்றின் எண்ணிக்கையினையும் மாத்திரையினையும் தருக?

| | எழுத்துக்கள் | எண்ணிக்கை | மாத்திரை |
|---|---|---|---|
| 1 | உயிர் மெய் | 216 | 1,2 |
| 2 | முற்றாய்தம் | 8 | ½ |
| 3 | உயிரளபடை | 21 | 3 |
| 4 | ஒற்றளபடை | 42 | 1 |
| 5 | குற்றியலுகரம் | 36 | ½ |
| 6 | குற்றியலிகரம் | 37 | ½ |
| 7 | ஐகாரக்குறுக்கம் | 3 | 1 |
| 8 | ஔகாரக்குறுக்கம் | 1 | 1 |
| 9 | மகரக்குறுக்கம் | 3 | ¼ |
| 10 | ஆய்தக்குறுக்கம் | 2 | ¼ |
| *** | **************** | 369 | ******* |

85.குற்றியலுகரம் என்றால் என்ன?
தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களின் பின்னே மொழிகளின் இறுதியில் வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரம்.

86.குற்றியலுகரத்தின் வகை எத்தனை?
ஆறு.

87.அவை யாவை?
நெடித் தொடர் குற்றியலுகரம், ஆய்தத் தொடர் குற்றியலுகரம், உயிர்த் தொடர் குற்றியலுகரம், வன் தொடர் குற்றியலுகரம், மென் தொடர் குற்றியலுகரம், இடைத் தொடர் குற்றியலுகரம்.

88.குற்றியலுகரத்தை ஆறு வகைப்படுத்துவதற்கான முறை யாது?
ஈற்று உகரத்திற்கு அயல் எழுத்தைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89.உதாரணம் தருக?
பலாசு (இங்கு ஈற்று உகரமான சு என்பதன் அருகில் லா (ஆ) எனும் உயிரெழுத்து வந்தமையால் இது உயிர்த் தொடர்)

90.குற்றியலுகரம் எவ்வெவ் சொற்களில் முடிவடையும் ?
கு, சு, டு, து, பு, று. என்னும் உகரங்களில் முடியும்.

91.குற்றியலுகரவகை ஆறையும் குறிப்பிட்டு ஒவ்வொரு வகைக்கும் இரண்டு உதாரணம் தருக?

| | குற்றியலுகர வகை. | உதாரணம் |
|---|---|---|
| 1 | நெடித் தொடர் குற்றியலுகரம். | நாகு, ஆடு. |
| 2 | ஆய்தத் தொடர் குற்றியலுகரம். | எஃகு, கஃசு. |
| 3 | உயிர்த் தொடர் குற்றியலுகரம். | வரகு, பலாசு. |
| 4 | வன் தொடர் குற்றியலுகரம். | கொக்கு, கச்சு. |
| 5 | மென் தொடர் குற்றியலுகரம். | சங்கு, வண்டு. |
| 6 | இடைத் தொடர் குற்றியலுகரம். | அல்கு, எய்து. |

92.முற்றியலுகரம் என்றால் என்ன?
தனிக் குற்றெழுத்தின் பின் வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமும் மெல்லின மெய்களிலும் இடையின மெய்களிலும் ஏறி நிற்கும் உகரமும் முற்றியலுகரம் ஆகும்.

93.உதாரணம் தருக?
கதவு, நெல்லு, கொள்ளு.

94.குற்றியலிகரம் என்றால் என்ன?
யகரம் வந்து புணருமிடத்து உகரந்திரிந்த இகரமும் மியா என்னும் அசைச் சொல்லிலே மகரத்தின் மேல் ஏறி நிற்கும் இகரமுங் குற்றியலிகரமாகும்.





95.உதாரணம் தருக?
நாகு + யாது = நாகியாது.

96.உயிரளபெடை என்றால் என்ன?
பாட்டில் ஓசை குறையுமிடத்து உயிரெழுத்துக்கள் சில தம் மாத்திரைகளில் அதிகமாக ஒலிக்கும் அவ் உயிரெழுத்து உயிரளபெடை ஆகும்.

97.உயிரளபெடைக்கு உதாரணம் தருக?
ஊஉமை, ஔஉவை.

98.ஒற்றளபெடை என்றால் என்ன?
பாட்டில் ஓசை குறையுமிடத்து ஒற்றெழுத்துக்கள் சில தம் மாத்திரைகளில் அதிகமாக ஒலிக்கும் அவ் ஒற்றெழுத்து ஒற்றளபெடை ஆகும்.

99.ஒற்றளபெடைக்கு உதாரணம் தருக?
பந்ந்து, அன்ன்பு.

100. மொழியில் அளபெடைகள் (சார்பெழுத்துக்களில்) ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?
1. பண்டமாற்றலில்
2. அழைத்தலில்
3. புலம்பலில்
4. இராகத்தில் பயன்படுத்துவதற்கு.

101. இடைநிலை மெய்மயக்கம் என்றால் என்ன?
மெய் எழுத்துக்கள் இரட்டித்து அல்லது பிற மெய்களுடன் இணைந்து சொல் இடையில் வருவதை இடைநிலை மெய்மயக்கம் என்பர்.

102. இதன் வகை எத்தனை? அவை எவை?
இரண்டு உடனிலை மெய்மயக்கம்.
வேற்றுநிலை மெய்மயக்கம்.



07
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103. உடனிலை மெய்மயக்கம் என்றால் என்ன?
ஒரே மெய் இரட்டித்து வருவது உடனிலை மெய்மயக்கமாகும்

104. உதாரணம் தருக?
பக்கம், பச்சை, வட்டம், பத்து.

105. வேற்றுநிலை மெய்மயக்கம் என்றால் என்ன?
வெவ்வேறு மெய்கள் இணைந்து வருவது வேற்றுநிலை மெய்மயக்கம் எனப்படும்.

106. உதாரணம் தருக?
வெட்கம், காட்சி, கற்பு, பயிற்சி.

## புணர்ச்சி

107. சொற் புணர்ச்சி என்பது யாது?
தமிழில் சொற்களை சேர்த்து எழுதும் முறை புணர்ச்சி ஆகும்.

108. புணர்ச்சியை எத்தனை வகையாகப் பிரிப்பர்?
இரண்டு வகையாகப் பிரிப்பர்.

109. அவை எவை?
இயல்புப் புணர்ச்சி.
விகாரப் புணர்ச்சி.

110. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?
நிலை மொழி ஈறோ வருமொழி முதலோ மாற்றமின்றிப் புணர்வது இயல்புப் புணர்ச்சி ஆகும்.

111. உதாரணம் தருக?
தாய் + தந்தை = தாய்தந்தை.





112. இங்கு நிலை மொழி எது?
தாய்

113. இதில் வருமொழி எது?
தந்தை

114. விகாரப் புணர்ச்சி எனப்படுவது யாது?
நிலை மொழி ஈறோ வருமொழி முதலோ விகாரப்பட்டுப் புணர்வது விகாரப் புணர்ச்சி ஆகும்.

115. விகாரப் புணர்ச்சியின் வகைப்பாட்டை தருக?
தோன்றல் விகாரப் புணர்ச்சி.
கெடுதல் விகாரப் புணர்ச்சி.
திரிதல் விகாரப் புணர்ச்சி.

116. விகாரப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக?
பலா + பழம் = பலாப்பழம் - தோன்றல்.
கால் + சங்கிலி = காற்சங்கிலி - திரிதல்.
மரம் + வேர் = மரவேர் - கெடுதல்.

117. நிலை மொழி ஈற்று மெய் வருமொழி உயிருடன் சேர்ந்து உயிர் மெய்யாகப் புணர்ந்தால் அது எத்தகைய பணர்ச்சி?
அதுவும் இயல்புப் புணர்ச்சியே ஆகும்.

118. உதாரணம் தருக?
ஆண் + அழகன் = ஆணழகன்.
தமிழ் + ஈழம் = தமிழீழம்.
தமிழ் + இலக்கணம் = தமிழிலக்கணம்.

119. சொற்றொடர் அடிப்படையில் புணர்ச்சியை எவ்வாறு வகுக்கலாம்?
வேற்றுமைப் புணர்ச்சி.
அல்வழிப் புணர்ச்சி என வகுக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120. வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன?
நிலை மொழிக்கும் வருமொழிக்கும் இடையே ஏதாவது ஒரு வேற்றுமை உருபு வெளிப்பட்டோ அல்லது மறைந்தோ வரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி ஆகும்.

121. உதாரணம் தருக?
வீடு + சென்றான் = வீட்டிற்குச் சென்றான்.

122. அல்வழிப் புணர்ச்சி என்றால் என்ன?
வேற்றுமை அல்லாத வழியில் புணர்வன யாவும் அல்வழிப் புணர்ச்சி ஆகும்.

123. உதாரணம் தருக?
அவன் + கண்டான் = அவன் கண்டான்.

124. நிலை மொழி இறுதி ஒலியின் அடிப்படையில் புணர்ச்சியை எவ்வாறு வகுப்பீர்?
நான்காக வகுப்பர் அவையாவன.
உயிர் முன் உயிர்.
உயிர் முன் மெய்.
மெய் முன் உயிர்.
மெய் முன் மெய்.

125. உயிரீற்றுப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக?
மணி + ஒலி = மணியொலி.
பலா + இலை = பலாவிலை.
⇒ உயிர் முன் உயிர்.

126. மெய்யீற்றுப் புணர்ச்சிக்கு உதாரணம் தருக?
நூல் + அகம் = நூலகம்.
வான் + அகம் = வானகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பதம்

127. பதம் என்றால் என்ன?
சொல்லின் மறுபெயர் பதம் ஆகும்.

128. இதனை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

129. அவை எவை?
பகுபதம், பகாப்பதம்.

130. பகாப்பதம் என்றால் என்ன?
ஆக்கக் கூறுகளாய் பகுக்க முடியாத சொல் பகாப்பதம் எனப்படும்.

131. பகாப்பதத்தின் வகைப்பாடு யாது?
பெயர்ப் பகாப்பதம்.
வினைப் பகாப்பதம்.
இடைப் பகாப்பதம்.
உரிப் பகாப்பதம்.

132. பெயர்ப் பகாப்பதம் என்றால் என்ன?
பெயரைக்குறிக்கும் பகுக்கமுடியாத சொல்.

133. உதாரணம் தருக?
மனம், ஆடை, பூமி.

134. வினைப் பகாப்பதம் என்றால் என்ன?
செயலைக் குறிக்கும் பகுக்க முடியாத சொல்.

135. உதாரணம் தருக?
நில், போ, வா, நட.

136. இடைப் பகாப்பதம் என்றால் என்ன?
பகுக்கமுடியாத இடைச் சொற்கள்.

137. உதாரணம் தருக?
ஒப்ப, போல.

138. உரிப் பகாப்பதம் என்றால் என்ன?
பகுக்கமுடியாத உரிச் சொற்கள்.

139. உதாரணம் தருக?
சால, உறு.

140. பகுபதம் என்றால் என்ன?
ஆக்கக் கூறுகளாய்ப் பகுக்கக் கூடிய பதம் பகுபதம் எனப்படும்.

141. பகுபத உறுப்புக்கள் எவை?
பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரிஜை, விகாரம்.

142. பகுதி எனப்படுவது யாது?
பகுபதத்தின் முதலில் அமைவது பகுதியாகும்.

143. இதன் பண்புகள் எவை?
I. பகுபதத்தின் முதலில் அமைவது.
II. மேலும் பகுக்கமுடியாதது.
III. ஏவலாய் அமைவது. } வினைப்பகுபதத்தில்
IV. செயலை உணர்த்தி வருவது. }

144. விகுதி எனப்படுவது யாது?
சொல்லின் இறுதியில் அமைவது விகுதியாகும்.

145. இதன் இயல்புகள் எவை?
இறுதியில் அமைவது.
திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தி வருவது.





146. இடைநிலை எனப்படுவது யாது?
சொற்பிரிவில் இடையில் அமைந்து வருவது இடைநிலை ஆகும்.

147. இதன் பண்புகள் எவை?
பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைவது காலம் காட்டும் தன்மை உடையது.

148. பகுதி, விகுதி இரண்டு உறுப்புக்களும் உடைய சொல்லைத்தந்து பகுத்துக் காட்டுக?
அன்பன் = அன்பு + அன்
அன்பு = பகுதி, அன் = விகுதி

149. பகுதி, விகுதி இடைநிலை உடைய சொல்லை பகுத்துக் காட்டுக?
உண்டான்.
உண் + ட் + ஆன்
(பகுதி) (இடைநிலை) (விகுதி)

150. சந்தி எனப்படுவது யாது?
பகுதியையும் இடைநிலையையும் சந்திக்க வைப்பது சந்தி ஆகும்.

151. உதாரணம் தருக?
படித்தனன்
படி + த் + த் + அன் + அன்
(பகுதி) (சந்தி) (இடைநிலை) (சாரியை) (விகுதி)

152. சாரியை எனப்படுவது யாது?
இடைநிலையையும் விகுதியையும் இணைப்பது சாரியை ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153. உதாரணம் தருக?
உண்டனன்
உண் + ட் + அன் + அன்
(பகுதி) (இடைநிலை) (சாரியை) (விகுதி)

154. விகாரம் எனப்படுவது யாது?
மாற்ற மடைந்து வரும் பகுபத உறுப்பு விகாரமாகும்.

155. உதாரணம் தருக?
நடந்தனன்
நட + த் + (ந்) + த் + அன் + அன்
(பகுதி) (சந்தி) (விகாரம்) (இடைநிலை) (சாரியை) (விகுதி)

---

## சொல்

156. சொல் என்றால் என்ன?
ஓரெழுத்தாலோ ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்தாலோ அமைந்து பொருளை உணர்த்தி வருவது சொல் ஆகும்.

157. ஓர் எழுத்துச் சொற்கள் சில தருக?
தை, கோ, போ, வா, ஆ

158. ஈரெழுத்துச் எழுத்துச் சொற்கள் சில தருக?
நட, ஓடு, கட, செல், பதி

159. இலக்கண முறைப்படி சொற்கள் எத்தனை வகைப்படும் ?
நான்கு வகைப்படும்.
அவைஎவை?
பெயர்ச்சொல்.
வினைச்சொல்.
இடைச்சொல்
உரிச்சொல்.





## பெயர்ச் சொல்

160. பெயர்ச் சொல் என்றால் என்ன?
பெயரிற்கு உரிமை பூண்டு நிற்கும் சொல் பெயர்ச் சொல் ஆகும்.

161. பெயர்ச் சொல்லிற்கு உதாரணம் தருக?
மண், மரம், நிலம், நீர், கந்தன், கமலா.

162. பெயர்ச்சொல்லின் ஆறு வகையும் எவை?
பொருட் பெயர். இடப் பெயர்.
காலப் பெயர். சினைப் பெயர்.
குணப் பெயர். தொழிற் பெயர்.

163. பொருட் பெயர் என்றால் என்ன?
உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் எல்லாவற்றையும் குறிப்பது.

164. பொருட் பெயரிற்கு உதாரணம் தருக?
மேசை, கதிரை, புத்தகம், விளக்கு, தேவன்.

165. இடப் பெயர் என்றால் என்ன?
இடத்தின் பெயரைக் குறித்து வருவது இடப்பெயர் ஆகும்.

166. உதாரணம் தருக?
சோழியபுரம், காஞ்சிபுரம், ஊர், நகரம், வயல்.

167. காலப் பெயர் என்றால் என்ன?
செக்னில் இருந்து யுகம் வரையான காலப்பகுதிகளையும் பருவ காலங்களையும் குறித்து வருவது.

168. காலப் பெயரிற்கு உதாரணம் தருக?
வேனில், மாரி, கோடை, வசந்தம், காலை.

169. சினைப் பெயர் என்றால் என்ன?
உறுப்புக்களை குறித்து வருவது சினைப்பெயர் ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. உதாரணம் தருக?
கால், கை, காது, மூக்கு, கிளை.

171. குணப் பெயர் என்றால் என்ன?
புண்பு, நிறம், வடிவம், அளவு போன்றவற்றை உணர்த்தி வருவது குணப்பெயராகும்.

172. குணப்பெயரிற்கு உதாரணம் தருக?
சாந்தம், கோபம், வெள்ளை, கறுப்பு, சிவப்பு.

173. தொழிற் பெயர் என்றால் என்ன?
தொழிலைக் குறித்து வருகின்ற பெயர்ச்சொல் தொழிற்பெயராகும்.

174. தொழிற் பெயரிற்கு உதாரணம் தருக?
கூத்து, காவடி, கற்பித்தல், மூடுதல், திறத்தல்.

175. காரணப் பெயர் என்றால் என்ன?
காரணம் கருதி ஏற்பட்ட பெயர் காரணப் பெயர் ஆகும்.

176. காரணப் பெயரிற்கு உதாரணம் தருக?
விளக்கு, பறவை, மண்வெட்டி, பாக்குவெட்டி.

177. இடுகுறிப் பெயர் என்றால் என்ன?
காரணம் கருதாது ஒரு பொருளுக்கு தொன்று தொட்டு வழங்கும் பெயர் இடுகுறிப்பெயர் ஆகும்.

178. இடுகுறிப் பெயரிற்கு உதாரணம் தருக?
மரம், மலை, கடல், சோறு.

179. காரண இடுகுறிப் பெயர் என்றால் என்ன?
காரணம் கருதிய போது அக்காரணத்தை உடைய பல பொருட்களிற்கும். காரணம் கருதாத போது இடுகுறியாக ஒரு பொருளையும் உணர்த்துவதாகும்.





180. உதாரணம் தருக?
அந்தணன், முள்ளி, அடுப்பு, செய்யுள்.

181. பொதுப் பெயர் என்றால் என்ன?
பல பொருட்களிற்கு பொதுவாகி வரும் பெயராகும்.

182. பொதுப் பெயரிற்கு உதாரணம் தருக?
மரம், விலங்கு, பறவை.

183. சிறப்புப் பெயர் எனப்படுவது யாது?
ஒவ்வொரு பொருட்களிற்கும் சிறப்பாக வழங்கும் பெயராகும்.

184. சிறப்புப் பெயரிற்கு உதாரணம் தருக?
கரி, கதலி, வேம்பு, காகம்.

185. ஆகுபெயர் என்றால் என்ன?
ஒரு பெருளின் இயற்பெயர் அப்பொருளோடு தொடர்புடைய பிறிதொரு பொருளிற்கு ஆகிவருவது ஆகுபெயராகும்.

186. இவ்வாகு பெயர் எத்தனை வகைப்படும் ?
16 வகைப்படும்.

187. பதினாறு வகை ஆகு பெயரையும் தந்து வகைக்கோர் உதாரணம் தருக?

| | ஆகுபெயர் வகை. | உதாரணம். |
|---|---|---|
| 1 | பொருளாகு பெயர். | தாமரை சூடினாள். |
| 2 | இடவாகு பெயர். | ஊர் சிரித்தது. |
| 3 | காலவாகு பெயர். | மாரி பொழிந்தது. |
| 4 | சினையாகு பெயர். | வெற்றிலை நட்டான். |
| 5 | குணவாகு பெயர். | வெள்ளை கட்டினான். |
| 6 | தொழிலாகு பெயர். | பொங்கலுண்டான். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 7 | எண்ணலளவை ஆகுபெயர். | காலாலே நடந்தான். |
| 8 | எடுத்தலளவை ஆகுபெயர். | இரண்டு கிலோ தந்தான் |
| 9 | முகத்தலளவை ஆகுபெயர். | இரண்டு கொத்து பெற்றேன். |
| 10 | நீட்டலளவை ஆகுபெயர். | மூன்று யார் போதும். |
| 11 | சொல்லாகு பெயர். | இந்நூலிற்கு உரை செய்தேன். |
| 12 | தானியாகு பெயர். | விளக்கு முரிந்தது. |
| 13 | கருவியாகு பெயர். | திருவாசகம் ஓதினான். |
| 14 | காரியவாகு பெயர். | அலங்காரங் கற்றான். |
| 15 | கருத்தாவாகு பெயர். | திருவள்ளுவர் படித்தான் |
| 16 | உவமையாகு பெயர். | பாவை வந்தாள். |

188. வேற்றுமை என்றால் என்ன?
தமிழில் பெயர்ச் சொற்கள் உருகளை ஏற்று வேறுபட்டு வருவது வேற்றுமை ஆகும்.

189. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
எட்டு வகைப்படும்.

190. அவை எவை?
ஒன்று தொடக்கம் எட்டு வரையான எண்களின் பெயரால் அழைக்கப்படுபவை.

191. ஒவ்வொரு வேற்றுமைக்கும் உரிய, உருபு, சொல்லுருபு, பொருள், உதாரணம் என்பவற்றைத் தருக?





## வேற்றுமைப்பகுப்பு

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் | உதாரணம் |
|---|---|---|---|---|
| 1 | - | ஆனவன், என்பவன் என அமையும் ஐம்பாற் சொற்கள் | எழுவாய் | கண்ணன் படித்தான்.<br>கண்ணன் ஆனவன் படித்தான்.<br>மாலா என்பவள் சிரித்தாள். |
| 2 | ஐ | -------- | செயப்படுபொருள்.<br>ஆக்கல்<br>அழித்தல்<br>அடைதல்<br>நீத்தல்<br>ஒத்தல்<br>உடைமை | வீட்டைக் கட்டினான்.<br>மரத்தைத் தறித்தான்.<br>கோவிலையடைந்தான்.<br>பாடசாலையை துறந்தான்<br>புலியைப் போன்றான்.<br>பொன்னையுடையான். |
| 3 | ஆல்<br>ஆன்<br>ஒடு<br>ஓடு | கொண்டு,<br>உடன். | கருவிப் பொருள்.<br>கருத்தாப் பொருள்.<br>ஊடநிகழ்ச்சிப் பொருள் | கத்தியால் வெட்டினான்(ஆல்)<br>பிரமனால் படைக்கப்பட்ட உலகம் (ஆல்)<br>தாயொடுமகன் சென்றான்(ஒடு)<br>தந்தையோடு தனையன் சென்றான்(ஓடு) |
| 4 | கு | பொருட்டு,<br>நிமித்தம்,<br>ஆக. | கோடல் -<br>பகை -<br>நட்பு -<br>தகுதி - | ஏழைக்கு உணவளித்தான்.<br>இராமனுக்கு பகைவன் இராவணன்.<br>துரியோதனனிற்கு நண்பன் கர்ணன்.<br>மன்னனுக்கு உரியது மணிமுடி. |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முதற்காரணம்-நிமித்தகாரணம் முறை | கத்திக்கு உருக்கு வேண்டும். கூலிக்கு வேலை செய்தான். பரதனிற்கு தந்தை தசரதன். |
| 5 | இல், இன். | நின்று இருந்து காட்டிலும் பாங்கிலும் | நீங்கல் பொருள் எல்லை பொருள் ஏதுப் பொருள் ஒப்புப் பொருள் | ஊரில் நீங்கினான். இலங்கையின் வடக்கு இந்தியா. கவியிற் சிறந்தவன் கம்பன். அவரில் இவர் சிறந்தவர். |
| 6 | அது ஆது அ | "உடைய" | கிழமைப்பொருள் ▪ தற்கிழமை ▪ பிறிதின்கிழமை | பழத்தினது சுவை. எனது புத்தகம். |
| 7 | கண், இல், உள், இடம் முதலை பல. | இடப்பொருளை உணர்த்தும் பொதுவான சொற்கள். | இடப்பொருள் | மலையின் கண் கோவில். ஊரில் வாழ்கிறான். |
| 8 | --- | ------- | விளிப்பொருள் | நண்பனே கேளாய். தங்காய் வாராய். |

192. திணை எத்தனை வகைப்படும் ?
இரண்டு வகைப்படும்.

193. அவை எவை?
உயர்திணை, அஃறிணை.

194. உயர்திணையில் அடங்குவன யாவை?
மனிதர், தேவர், நரகர். (பகுத்தறிவுடைய பொருட்கள்.)

195. உயர்திணைக்கு உதாரணம் தருக?
கண்ணன், இந்திரன், முருகன்.





196. அஃறிணையில் அடங்குவன யாவை?
உயர்திணை தவிர்ந்த மிருகம், பறவை, நிலம், நீர் முதலியன. (உயிருள்ள உயிரற்ற பௌத்தறிவற்றவை)

197. பால் எத்தனை வகைப்படும் ?
ஐந்து வகைப்படும்.

198. அவை எவை?
ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

199. ஆண்பால் எனப்படுவது யாது?
உயர்திணையில் ஆண்கள் எல்லோரையும் குறித்து வருவது ஆண்பாலாகும் இது அன் ஆன் போன்ற விகுதிகளில் முடிவுறும்.

200. உதாரணம் தருக?
ஆசிரியன், யாழ்ப்பாணத்தான்.

201. பெண்பால் எனப்படுவது யாது?
உயர்திணையில் பெண்கள் எல்லோரையும் குறித்து வருவது பெண்பாலாகும் இது அள் ஆள் போன்ற விகுதிகளில் முடிவுறும்.

202. உதாரணம் தருக?
அவள், சுழிபுரத்தாள்.

203. பலர்பால் எனப்படுவது யாது?
உயர்திணையில் ஆண்கள், பெண்களைப் பொதுவாகக் குறித்து வருவது பலர்பாலாகும். இது அர் ஆர் போன்ற விகுதிகளில் முடிவுறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

204. உதாரணம் தருக?
அரசர், பெரியார்.

205. ஆண்பாலிற்கும் பெண்பாலிற்கும் பொதுவான சொற்கள் சில தருக?
நோயாளி, அறிவாளி, உழைப்பாளி.

206. ஒன்றன்பால் எனப்படுவது யாது?
அஃறிணையில் ஒருமைப் பெயர்களைக் குறிப்பது ஒன்றன் பாலாகும். இது 'து' விகுதியில் முடிவதாக கூறப்படுகின்றது.

207. உதாரணம் தருக?
நாய், பூனை, புத்தகம் , சென்றது.

208. பலவின் பால் எனப்படுவது யாது?
அஃறிணையில் பன்மைப் பெயர்களைக் குறிப்பது பலவின் பாலாகும். இது 'கள்' விகுதியில் முடிவதாக கூறப்படுகின்றது.

209. உதாரணம் தருக?
மரங்கள், பசுக்கள், கற்கள்.

210. உயர்திணை ஆண்பாற் சிறப்புப் பெயர்கள் சில தருக?
நம்பி, விடலை, குரிசில்.

211. உயர்திணை பெண்பாற் சிறப்புப் பெயர்கள் சில தருக?
நங்கை, மாது, தையல்.

212. அஃறிணை ஆண்பாற் சிறப்புப் பெயர்கள் சில தருக?
கடுவன், சேவல், கலை, களிறு.

213. அஃறிணை பெண்பாற் சிறப்புப் பெயர்கள் சில தருக?
பெட்டை, பேடு, பிடி, பிணை.





214. எண் எனப்படுவது யாது?
ஒருமை, பன்மை எனும் அடிப்படையில் பெயர்ச் சொற்களை வகைப்படுத்தல் எண் ஆகும்.

215. ஒருமை, பன்மைக்கு உதாரணம் தருக?
மாணவன் ஒருமை.
மாணவர்கள் பன்மை.

216. இடத்தின் மூன்று பிரிவுகளும் எவை?
தன்மை, முன்னிலை, படர்க்கை.

217. தன்மை எனப்படுவது யாது?
தன்னைக் குறித்து வருவது அதாவது பேசும் பொருள் தன்மை ஆகும்.

218. தன்மைப் பெயர்கள் சில தருக?
நான், நாம், நாங்கள்.

219. முன்னிலை எனப்படுவது யாது?
பேசும் பொருளுக்கு எதிர் முகமாக்கப்பட்டு கேட்கும் பொருள் அதாவது முன்னுள்ள பொருள் முன்னிலை ஆகும்.

220. உதாரணம் தருக?
நீ, நீர், நீங்கள்.

221. படர்க்கை எனப்படுவது யாது?
தன்மை, முன்னிலை தவிர்ந்த ஏனையவையாவும் படர்க்கை ஆகும்

222. உதாரணம் தருக?
அவன், அவள், அவை.

223. வேற்றுமை உருபேற்கும் சொல் எது?
பெயர்ச்சொல் மட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினைச்சொல்

224. வினைச் சொல் என்றால் என்ன?
செயலை உணர்த்தி வரும் சொல் வினைச்சொல் ஆகும்.

225. வினைச் சொல்லிற்கு உதாரணம் தருக?
கற்றான், துயின்றான், மேய்ந்தது, பாடினாள், வந்தன.

226. காலம் காட்டும் சொல் வகை எது?
வினைச்சொல்.

227. காலம் எத்தனை வகைப்படும்?
மூன்று வகைப்படும்.

228. அவை யாவை?
இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

229. இறந்தகாலம் என்றால் என்ன?
செயல் நடந்து முடிந்ததை குறித்து வருவது இறந்த காலமாகும்.

230. உதாரணம் தருக?
படித்தான், ஆடினாள்.

231. இறந்தகால இடைநிலைகள் எவை?
த், ட், ற், ன்.

232. வினைச் சொல்லில் காலத்தைக் கண்டறிய உதவுவது எது?
இடைநிலை.

233. நிகழ்காலம் என்றால் என்ன?
செயல் நடைபெற்றுக் கொண்டிருப்பதை குறித்து வருவது நிகழ்காலமாகும்.





234. உதாரணம் தருக?
படிக்கிறான், ஆடுகின்றாள்.

235. நிகழ்கால இடைநிலைகள் எவை?
கின்று, கிறு.

236. எதிர்காலம் என்றால் என்ன?
செயல் நடைபெற இருப்பதை குறித்து வருவது எதிர்காலமாகும்.

237. உதாரணம் தருக?
படிப்பான், ஆடுவாள்.

238. எதிர்கால இடைநிலைகள் எவை?
ப், வ்.

239. வினைச்சொல்லின் வகைகள் சில தருக?
★ முற்றுவினை, எச்சவினை.
★ தெரிநிலைவினை, குறிப்புவினை.
★ பெயரெச்சம், வினைஎச்சம்.
★ உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை.
★ ஏவல்வினை, வியங்கோள்வினை.
★ தன்வினை, பிறவினை.
★ செய்வினை, செயப்பாட்டுவினை.
★ செயப்படுபொருள்குன்றியவினை,
★ செயப்படுபொருள்குன்றாதவினை.
★ ஒருமைவினை, பன்மைவினை.
★ தன்மைவினை, முன்னிலைவினை.

240. தெரிநிலைவினை என்றால் என்ன?
காலத்தை தெளிவாகக் காட்டும் வினை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

241. உதாரணம் தருக?
நடந்தான் (இறந்தகாலம்)

242. குறிப்புவினை என்றால் என்ன?
காலத்தை குறிப்பால் உணர்த்தும் வினை
(காலத்தை தெளிவாக உணர்த்தாத வினை)

243. உதாரணம் தருக?
கரியன் (காலம் தெளிவின்மை)

244. உடன்பாட்டுவினை என்றால் என்ன?
தொழில் நடைபெற்றமையை உணர்த்தி வருவது உடன்பாட்டு வினையாகும்.

245. உதாரணம் தருக?
நடந்தான்.

246. எதிர்மறைவினை என்றால் என்ன?
தொழில் நடைபெறாமையை உணர்த்தி வருவது எதிர்மறைவினையாகும்.

247. உதாரணம் தருக?
நடவான்.

248. முற்றுவினை என்றால் என்ன?
பால்காட்டும் விகுதியோடு கூடி முற்றுப் பொருளை தருவது முற்றுவினையாகும்.

249. உதாரணம் தருக?
குளிர்ந்தது நிலம்.

250. எச்சவினை என்றால் என்ன?
முற்றுப் பெறாது குறையாய் அமையும் வினை எச்சவினை ஆகும்.





251. எச்சவினையை எவ்வாறு பகுக்கலாம்?
பெயரெச்சம், வினையெச்சம்.

252. பெயரெச்சம் என்றால் என்ன?
முடிவடைவதற்கு பெயர்ச் சொல்லை வேண்டி நிற்கும் எச்சம் பெயரெச்சமாகும்.

253. உதாரணம் தருக?
கரிய, பெரிய.

254. வினை எச்சம் என்றால் என்ன?
முடிவடைவதற்கு வினைச் சொல்லை வேண்டி நிற்கும் எச்சம் வினையெச்சமாகும்.

255. உதாரணம் தருக?
வந்து, செய்ய.

256. ஏவல் வினை என்றால் என்ன?
கட்டளை இடும் கருத்தில் அமையும் வினை ஏவல் வினை ஆகும்.

257. உதாரணம் தருக?
உண்ணும், படியும்.

258. வியங்கோள்வினை என்றால் என்ன?
இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவான ஏவல் வினை வியங்கோள்வினை ஆகும்.

259. உதாரணம் தருக?
வாழ்க, வாழியர்.

260. தன்வினை என்றால் என்ன?
செய்பவன் தானே செய்வதாக அமையும் வினைகளைக் கொண்டது தன்வினை ஆகும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

261. உதாரணம் தருக?
வளவன் படித்தான்.
மணிமாறன் வந்தான்.

262. பிறவினை என்றால் என்ன?
பிறரைக் கொண்டு செய்விப்பதாக அமையும் வினைகளைக் கொண்டது பிறவினை ஆகும்.

263. உதாரணம் தருக?
வளவன் படிப்பித்தான்.
அவன் வீட்டைக் கட்டுவித்தான்.

264. செய்வினை என்றால் என்ன?
தொழிலைச் செய்பவன் எழுவாயாக அமையும் வாக்கியம் செய்வினை ஆகும்.

265. உதாரணம் தருக?
உழவன் வயலை உழுதான்.

266. செயப்பாட்டுவினை என்றால் என்ன?
செயப்படு பொருள் எழுவாயாக அமையும் வாக்கியம் செயப்பாட்டுவினை ஆகும்.

267. உதாரணம் தருக?
உழவனால் வயல் உழப்பட்டது.

268. செயப்படுபொருள் குன்றிய வினை என்றால் என்ன?
செயப்படுபொருள் அற்ற வினை ஆகும்.

269. உதாரணம் தருக?
எழுந்தான், மகிழ்ந்தான்.

270. செயப்படுபொருள் குன்றாவினை என்றால் என்ன?
செயப்படுபொருள் உள்ள வினை ஆகும்.





271. உதாரணம் தருக?
படித்தான் (பாடத்தை)
உண்டாள் (உணவை)

272. தன்மை வினை எனப்படுவது யாது ?
என், ஏன், அன், எனும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள்.

273. உதாரணம் தருக?
உண்கிறேன்.

274. முன்னிலை வினை எனப்படுவது யாது ?
ஐ, ஆய், இ, எனும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள்.

275. உதாரணம் தருக?
உண்கிறாய்.

276. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?
தெரிநிலை வினைமுற்றோ குறிப்பு வினைமுற்றோ பெயரின் சிறப்பியல்பாகிய வேற்றுமை உருபுகளை ஏற்று வந்தால் அதுவினையாலணையும் பெயராகும்.

277. உதாரணம் தருக?
நடந்தானைக் கண்டேன்.

---

## இடைச் சொல்

278. இடைச் சொல் என்றால் என்ன?
தனித்து நின்று பொருள் உணர்த்தாது பெயருடனோ வினையுடனோ சார்ந்து பொருள் உணர்த்தும் சொல்.



18
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

279. தனித்து நின்று பொருள் உணர்த்தாத சொல் வகைகள் எவை?
இடைச் சொல், உரிச் சொல்.

280. இடைச்சொற்கள் சில தருக?
மற்று, பற்று, போல, அன்ன, ஒப்ப.

281. இடைச் சொற்களாக அமைபவை எவை?
வேற்றுமையுருபுகள், விகுதியுருபுகள், உவமையுருபுகள், தத்தமக்குரிய பொருள் உணர்த்துபவை, இடைநிலையுருபுகள், சாரியையுருபுகள் போன்றபல.

282. இடைச் சொல்லாக அமையும் உவமையுருபுகள் சில தருக?
போல, ஒப்ப.

283. தத்தம் பொருளுணர்த்தும் இடைச் சொற்கள் சில தருக?
ஏ, ஓ, உம், என, கொல், தொறும், தோறும் போன்ற பல.

284. ஏகார இடைச்சொல் எவ்வெவ் பொருட்களில் அமையும் எனக்கூறி உதாரணம் தருக?
- தேற்றம் - உண்டேகடவுள்.
- வினா - நீயேகொண்டாய்.
- எண் - நிலமே, நீரே, தீயே, வளியே.
- பிரிநிலை - அவருளிவனே நல்லன்.
- எதிர் மறை - நானே கொண்டேன்.
- இசைநிறை - ஏயே யிவளொருத்தி பேடியோ.
- ஈற்றசை - என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.





285. ஓகார இடைச்சொல் எவ்வெவ் பொருட்களில் அமையும் எனக் காட்டி உதாரணம் தருக?
ஒழியிசை - படிக்கவோ வந்தாய்.
வினா - குற்றியோ, மகனோ.
உயர்வு சிறப்பு - ஓஓ பெரியன்.
இழிவு சிறப்பு - ஓஓ கொடியன்.
எதிர் மறை - அவனோ கண்டான்.
தெரி நிலை - ஆணோ அதுவுமன்று பெண்ணோ அதுவுமன்று.
கழிவு - ஓஓ தமக்கோர் உறுதியுணராரோ.
பிரிநிலை - இவனோ கேட்டான்.
அசைநிலை - காணிய வம்மினோ.

286. உம் இடைச்சொல் எவ்வெவ் பொருட்களில் அமையும் எனக் காட்டி உதாரணம் தருக?
- எதிர் மறை - களவு செய்யினும் பொய்கூறலை ஒழிக்குக.
- உயர்வு சிறப்பு - குறவரு மருளுங்குன்றம்.
- இழிவு சிறப்பு - புலையனும் விரும்பா புன்புலால் யாக்கை.
- ஐயம் - சமாதானம் குழம்பினாலும் குழம்பும்.
- எச்சம் - அமைச்சரும் வந்தார்.
- முற்று - எல்லோரும் வந்தனர்.
- எண் - இரவும் பகலும்.
- தெரிநிலை - ஆணுமன்று பெண்ணுமன்று
- ஆக்கம் - பாலுமாயிற்று.

287. கொல் என்னும் இடைச்சொல் எவ்வெவ் பொருட்களில் அமையும் எனக் கூறி உதாரணம் தருக?
ஐயம் - இவ்வுரு குற்றி கொல் மகன்கொல்.
அசைநிலை — கற்றதனாலாய பயன் என் கொல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிச்சொல்

288. உரிச்சொல் எனப்படுவது யாது ?
பொருட்கு உரிமை பூண்டு நிற்கும் பண்பை உணர்த்துஞ் சொல்லாம்.

289. உரிச்சொற்கள் சில தருக?
சால, உறு, தவ, நனி, கூர், கடி.

290. உரிச்சொற்கள் அமைய சில தொடர்களைக் கூறுக ?
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
ஓடுமீன்ஓட உறு மீன் வருமளவும் வாடி இருக்குமாங் கொக்கு.
அவன் குளிரால் நனி வருந்தினான்.

## இலக்கிய வழக்கு சொற்பாகுபாடு

291. இலக்கிய மரபில் இடம் பெறும் சொற்களை எவ்வாறு வகுப்பீர்?
இயற் சொல். திரிசொல்.
திசைச் செல். வட சொல். என நான்காக வகுப்பர்.

292. இயற் சொல் என்றால் என்ன?
கற்றோரும் மற்றோறும் இயல்பாக பொருளுணர்ந்து வழங்கும் சொல் இதுவாகும்.

293. உதாரணம் தருக?
மண், மரம், நிலம், நீர், காற்று.

294. திரி சொல் என்றால் என்ன?
கற்றவர்கள் மட்டும் பொருளுணர்ந்து பயன்படுத்தும் சொல் இதுவாகும்.





295. திரி சொல்லிற்கு உதாரணம் தருக?
வெற்பு, கிரி, விளம்புதல், சக்கரம், ஆளி.

296. இயற் சொல் எத்தனை வகைப்படும் ?
நான்கு வகைப்படும்.

297. அவை எவை?
பெயர் இயற் சொல்.
வினை இயற் சொல்.
இடை இயற் சொல்.
உரி இயற் சொல்.

298. வடசொல் எனப்படுவது யாது?
தமிழில் நடைபெற்று செந்தமிழோடு வந்து கலந்து வழங்கும் ஆரிய மொழிச் சொற்கள் இதுவாகும்.

299. திரிசொல் எவ்வாறு பிரிக்கப்படும் ?
அதுவும் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பிரிக்கப்படும்.

300. வடசொல்லை எவ்வாறு பிரிக்கலாம் ?
தற்சமம், தற்பவம் எனப்பிரிக்கலாம்.

301. தற்சமம் என்றால் என்ன?
ஒலி மாறுபாடு இன்றித் தமிழில் வழங்கும் ஆரியச் சொல் இதுவாகும். (ஆரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் ஆனது)

302. உதாரணம் தருக?
கமலம், குங்குமம், காரணம், அமலன்.

303. தற்பவம் என்றால் என்ன?
வடமொழி எழுத்துக்கள் கொண்டமைந்த சொற்களைத் தமிழ் ஒலி மரபிற் கேற்ப அமைத்து வழங்குதல் தற்பவம் ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

304. தற்பவத்திற்கு உதாரணம் தருக?
ஜலம் - சலம்
ஹரன் - அரன்
விஷயம் - விடயம்
ஜெபம் - செபம்
புஸ்தகம் - புத்தகம்

305. திசைச் சொல் எனப்படுவது யாது?
வட மொழி தவிர்ந்த தமிழுடன் கலந்து வழங்கும் பிறமொழிச் சொற்கள் திசைச் சொற்கள் ஆகும்.

306. திசைச் சொல்லாக இடம் பெறும் சொல் கொண்ட மொழிகள் சில தருக?
தெலுங்கு, கன்னடம், மலையாளம், போர்த்துக்கேயம், ஒல்லாந்தம், ஆங்கிலேயம்.

307. போர்த்துக்கேய சொற்கள் சில தருக?
ஏலம், கோப்பை, பீங்கான், அலவாங்கு, ஜன்னல்.

308. ஒல்லாந்த மொழிச் சொற்கள் சில தருக?
துட்டு, தோம்பு, உலாந்தா, சாக்கு, கக்கூசு.

309. ஆங்கில மொழிச் சொற்கள் 5 தருக?
இஞ்சினியர், கம்பனி, கலண்டர், கார், பென்சில்.

310. சொல் என்பதன் மறுபதம் இரண்டு தருக?
கிளவி, பதம்.

311. குசினி, இனாம் இவை எம் மொழியிலிருந்து தமிழுடன் வந்து கலந்தன?
பிரெஞ்சிலிருந்து குசினி என்பதும், உருது மொழியிலிருந்து இனாம் என்பதும் வந்து கலந்தன.





## இரு வகை வழக்கு

312. இரு வகை வழக்குகளும் யாவை ?
தகுதிவழக்கு, இயல்பு வழக்கு.

313. இயல்பு வழக்கு எனப்படுவது யாது ?
எப்பொருட்கு எச் சொல் இயல்பாய் அமைந்ததோ அப்பொருளை அச் சொல்லால் குறிப்பதே இயல்பு வழக்காகும்.

314. இது எத்தனை வகைப்படும் ?
மூன்று வகைப்படும்.

315. அவை யாவை ?
இலக்கணமுடையது.
இலக்கணப்போலி.
மருஉ.

316. இலக்கணமுடையது என்றால் என்ன?
இலக்கண மரபு பேணி வழங்கி வருஞ் சொற்கள் இலக்கணமுடையது ஆகும்.

317. உதாரணம் தருக?
நிலம், நீர், அன்பு, அழகு.

318. இலக்கணப்போலி என்றால் என்ன?
இலக்கணமுடையதைப்போல் தொன்று தொட்டு வழங்கப்படும் இலக்கண நெறிக்கு உட்படாத சொல்.

319. உதாரணம் தருக?
நுனிநா, புறநகர், வாயில்.

320. இச் சொற்கள் இலக்கணமுறைப்படி எவ்வாறு அமைய வேண்டும்?
நாநுனி, நகர்ப்புறம், இல்வாய். என அமைய வேண்டும்.



21
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

321. மரூஉ என்றால் என்ன?
ஒரு சொல் காலப்போக்கில் இன்னோர் சொல்லாக மாற்றமடைந்து வழங்குவது மரூஉ ஆகும்.

322. உதாரணம் தருக?
அருமருந்தன்ன பிள்ளை – அருமந்தபிள்ளை.
தஞ்சாவூர் - தஞ்சை.
சுருதி - சுதி.
புத்தூர் - புதூர்.

323. தகுதி வழக்கு என்பது யாது ?
ஒரு பொருளை குறிப்பதற்கு ஒருசொல் இயல்பாய் அமைந்தாலும் அச் சொல்லால் குற்ப்பது தகுதியில்லை எனக்கருதி வேறு சொல்லால் குறிப்பதே தகுதி வழக்கு ஆகும்.

324. இது எத்தனை வகைப்படும் ?
மூன்று வகைப்படும்.

325. அவை யாவை ?
இடக்கரடக்கல்.
மங்கலம்.
குழூஉக்குறி.

326. இடக்கரடக்கல் என்றால் என்ன?
சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வோறொரு சொல்லால் சொல்வது இடக்கரடக்கல் ஆகும்.

327. உதாரணம் தருக?
மலங்கழித்தல் - கொல்லைக்குப்போதல்.

328. மங்கலம் என்றால் என்ன?
அமங்கலச் சொற்களை மங்கலமாகக் கூறுதல் மங்கலம் எனப்படும்





329. உதாரணம் தருக?
செத்தார் - துஞ்சினார்.
தாலி அறுந்தது – தாலி பெருகிற்று.

330. குழூஉக்குறி என்றால் என்ன?
ஒரு கூட்டத்தார் ஏதாவது காரணம் கருதி ஒரு சொல்லைக் குறிக்கும் இயல்பான சொல்லைத் தவிர்த்து வேறொரு சொல்லால் குறிப்பது குழூஉக்குறி ஆகும்.

331. உதாரணம் தருக?
வேடர் கள்ளை சொல் விளம்பி எனல்.

---

## வாக்கியம்

332. வாக்கியம் என்றால் என்ன?
சொற்கள் தொடர்ந்து வந்து ஒரு முழுக்கருத்தை வலயுறுத்தி நிற்பது வக்கியம் ஆகும்.

333. ஓர் வாக்கியத்தில் ஆகக்குறைந்தது எத்தனை சொல் இடம்பெறும் ?
இரண்டு.

334. உதாரணம் தருக?
கண்ணன் கற்றான். (இரு சொற்கள்)

335. கருத்து முற்றுப் பெறாது சொற்கள் சேர்ந்து வந்தால் அது எப்பெயர் பெறும்?
எச்சத் தொடர் மொழி.

336. எச்சத் தொடரை எவ்வாறு வகுக்கலாம்?
பெயர் எச்சத் தொடர்.
வினை எச்சத் தொடர். என வகுக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

337. பெயர் எச்சம் என்றால் என்ன?
பெயர்ச் சொல்லிற்கு அடைமொழியாய் நிற்கும் சொல் பெயர் எச்சம் ஆகும்.

338. வினையெச்சம் என்றால் என்ன?
வினைச் சொல்லிற்கு அடைமொழியாய் நிற்கும் சொல் வினை எச்சம் ஆகும்.

339. பெயரெச்சத்திற்கு உதாரணம் தருக?
கையினாலே <u>தீட்டும்</u> (ஓவியங்கள்)

340. வினையெச்சத்திற்கு உதாரணம் தருக?
கண்ணன் புத்தகத்தை <u>கவனமாக</u> (வாசித்தான்)

341. பிரதான வாக்கிய வகைகள் எவை?
தனி வாக்கியம்.
கூட்டு வாக்கியம்.
கலப்பு வாக்கியம்.

342. தனி வாக்கியம் என்றால் என்ன?
ஒரே ஒரு செயலை மட்டும் வலியுறுத்தி வரும் வாக்கியம் தனி வாக்கியம் ஆகும்.

343. தனி வாக்கியத்திற்கு உதாரணம் தருக?
கண்ணகி மதுரையை எரித்தாள்.

344. கூட்டு வாக்கியம் என்றால் என்ன?
ஒன்றிற்கு மேற்பட்ட செயலை வலியுறுத்தி வரும் வாக்கியம் கூட்டு வாக்கியம் ஆகும்.

345. கூட்டு வாக்கியத்திற்கு உதாரணம் தருக?
கண்ணன் காலையில் எழுந்து கல்லூரி சென்று கல்வி கற்று வீட்டிற்கு மீண்டான்.





346. மேலுள்ள வாக்கியத்தில் வந்த செயல்கள் எத்தனை?
நான்கு செயல்கள்.

347. அச் செயல்களை குறிப்பிடுக?
காலையில் எழல்.
கல்லூரி செல்லல்.
கல்வி கற்றல்.
வீட்டிற்கு வருதல்.

348. கலப்பு வாக்கியம் என்றால் என்ன?
ஒரு தலைமைத் தொடரோடுசார்புத் தொடரும் இணைந்து வருவது கலப்பு வாக்கியம் ஆகும்.

349. கலப்பு வாக்கியத்திற்கு உதாரணம் தருக?
"நாம் பாதையிலே நடக்க வேண்டும்" என தாய் மகனிற்கு கூறினாள்.

350. தனி வாக்கியத்தை எத்தனை வகையாக பிரிக்கலாம்?
ஐந்து வகையாக பிரிக்கலாம்.

351. அவை எவை?
கூற்று வாக்கியம்.
வினா வாக்கியம்.
ஏவல் வாக்கியம்.
விருப்பு வாக்கியம்.
வியப்பு வாக்கியம்.

352. கூற்று வாக்கியம் என்றால் என்ன?
ஓர் உண்மைச் சம்பவத்தை எடுத்துக் கூறுவது கூற்று வாக்கியம் ஆகும்.

353. செப்பு வாக்கியத்தின் மறுபெயர் என்ன?
கூற்று வாக்கியம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

354. உதாரணம் தருக?
கோவலன் கொடுரமாய்க் கொலையுண்டான்.

355. வினா வாக்கியம் என்றால் என்ன?
கேள்விப்பாங்கில் அமைந்து வரும் வாக்கியம். அதாவது பதிலை எதிர்பார்த்து வரும் வாக்கியம் வினா வாக்கியமாகும்.

356. உதாரணம் தருக?
இன்று மழை பெய்யுமா?

357. ஏவல் வாக்கியம் என்றால் என்ன?
கட்டளையிடும் பாங்கில் அமைந்து வரும் வாக்கியம் ஏவல் வாக்கியம் ஆகும்.

358. உதாரணம் தருக?
நீ புத்தகத்தைப் படி.

359. விருப்பு வாக்கியம் என்றால் என்ன?
ஒருவரது விருப்பத்தை தெரிவித்து வருவது விருப்பு வாக்கியம் ஆகும்.

360. விருப்பு வாக்கியத்தின் மறுபெயர் என்ன?
வியங்கோள் வாக்கியம்.

361. விருப்பு வாக்கியத்திற்கு உதாரணம் தருக?
மக்களிடையே ஒற்றுமை ஓங்குக.

362. வியப்பு வாக்கியம் என்றால் என்ன?
அதிசய நிகழ்வை அல்லது ஆச்சரிய உணர்வை வெளிப்படுத்தி வருவது வியப்பு வாக்கியம் ஆகும்.

363. உதாரணம் தருக?
"அந்தோ அகதிகள்படும் அவலம் என்னே!"





364. வியப்பு வாக்கியத்தின் மறுபெயர் என்ன?
மெய்ப்பாட்டு வாக்கியம்.

365. வியப்பினை உணர்த்தும் சொற்கள் சில தருக?
ஆகா, ஓகோ, ஐயோ, ஐயகோ, அந்தகோ, அம்மட்டோ, ஆ, அம்மம்மா.

366. வாக்கிய உறுப்புக்கள் எவை?
எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி.

367. பயனிலையை எவ்வாறு அறியலாம்?
பெரும்பாலும் வாக்கியத்தின் கருத்து முற்றுப் பெறும் இடம் பயனிலை ஆகும்.

368. எழுவாயை எவ்வாறு கண்டறிவீர்?
பயனிலையில் நின்று யார், எது எனும் வினாவைத் தொடுத்து எழுவாயை கண்டறியலாம்.

369. செயப்படுபொருளை எவ்வாறு அறியலாம்?
பயனிலையில் நின்று யாரை, எதை எனும் வினாவைத் தொடுத்து செயப்படுபொருளை அறியலாம்.

370. அடைமொழியினை வகைப்படுத்திக் காட்டுக?
எழுவாய் அடைமொழி.
பயனிலை அடைமொழி.
செயப்படுபொருள் அடைமொழி.

371. "வெள்ளைப் பசு பச்சைப் புல்லை வேகமாக மேய்ந்தது" இவ் வாக்கியத்தில் பயனிலையாது?
மேய்ந்தது.

372. எழுவாய் என்ன?
பசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373. செயப்படுபொருள் என்ன?
புல்

374. இவ் வாக்கியத்தில் எத்தனை அடைமொழிச் சொற்கள் உண்டு?
மூன்று.

375. அவை எவை?
வெள்ளை - எழுவாய் அடைமொழி.
பச்சை - செயப்படுபொருள் அடைமொழி.
வேகமாய் - பயனிலை அடைமொழி.

376. எழுவாய் தொக்கு நிற்க இரு வாக்கியம் தருக?
அறம் செய்ய விரும்பு.
புத்தகத்தைப் படி.

377. பயனிலை மறைந்து வரும் வாக்கியம் 3 தருக?
மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை.
ஆரனை கடித்தால் மரணம்.

378. "வாய்மைக்கு அரிச்சந்திரன்" இதில் பயனிலை என்ன?
தோன்றவில்லை. (சிறந்தவனாவான்)

379. செயப்படுபொருள் குன்றிய வாக்கியம் ஒன்று தருக?
பசு மேய்ந்தது.

380. "ஆசிரியர் மாணவனைச் சந்தித்தார்" இதில் வந்த வாக்கிய உறுப்புக்களைத் தருக?
பயனிலை - சந்தித்தார்.
எழுவாய் - ஆசிரியர்.
செயப்படுபொருள் - மாணவனை.





## தொடர்கள்

381. தொடர் என்றால் என்ன?
ஒரு சொல்லைத் தொடர்ந்து இன்னொரு சொல் அல்லது சொற்கள் வருவது தொடர் ஆகும்.

382. தொடரை எத்தனை வகையாக பிரிக்கலாம்?
இரண்டு வகையாக பிரிக்கலாம்.

383. அவை எவை?
தொகாநிலை தொடர்.
தொகைநிலை தொடர்.

384. தொகாநிலை தொடர் என்றால் என்ன?
வேற்றுமை உருபு முதலிய உருபுகள் நேரடியாக அமைந்து வருவது.

385. இதனை எத்தனை வகையாக பிரிக்கலாம்?
ஒன்பது வகையாகப் பிரிக்கலாம்.

386. அவை எவை?
எழுவாய்த் தொடர்.
விளித் தொடர்.
வேற்றுமைத் தொடர்.
வினைமுற்றுத் தொடர்.
பெயரெச்சத் தொடர்.
வினைஎச்சத் தொடர்.
இடைச் சொற்றொடர்.
உரிச் சொற்றொடர்.
அடுக்குத் தொடர்.

387. எழுவாய்த் தொடர் எனப்படுவது யாது?
எழுவாய்ச் சொல்லை தொடர்ந்து சொல் வருவது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

388. உதாரணம் தருக?
கரிகாலன் வந்தான்.

389. விளித் தொடர் எனப்படுவது யாது?
விளிச் சொல்லை தொடர்ந்து சொல் வருவது.

390. உதாரணம் தருக?
கண்ணா வா.

391. வேற்றுமைத் தொடர் எனப்படுவது யாது?
வேற்றுமை உருபுகள் தொக்கு நிற்காது அமைந்து வருவது.

392. உதாரணம் தருக?
கூலிக்கு வேலை செய்தான்.

393. வினைமுற்றுத் தொடர் என்றால் என்ன?
வினைமுற்றைத் தொடர்ந்து சொல் வருவது.

394. உதாரணம் தருக?
உண்டான் சாத்தன்.

395. பெயரெச்சத் தொடர் என்றால் என்ன?
பெயர் எச்சத்தைத் தொடர்ந்து பெயர்ச் சொல் வருவது.

396. உதாரணம் தருக?
நல்ல தலைவன்.

397. வினைஎச்சத் தொடர் என்றால் என்ன?
வினை எச்சத்தைத் தொடர்ந்து வினைச் சொல் வருவது.

398. உதாரணம் தருக?
பாய்ந்து வந்தது.

399. இடைச் சொற்றொடர் என்றால் என்ன?
இடைச் சொல்லை தொடர்ந்து சொல் வருவது.





400. உதாரணம் தருக?
மற்றொன்று.

401. உரிச் சொற்றொடர் என்றால் என்ன?
உரிச் சொல்லை தொடர்ந்து சொல் வருவது.

402. உதாரணம் தருக?
சாலவும் நன்று.

403. அடுக்குத் தொடர் என்றால் என்ன?
ஒரே சொல் இருமுறை அடுக்கி வருவது.

404. உதாரணம் தருக?
பெரிய பெரிய.

405. தொகைநிலை தொடர் என்றால் என்ன?
வேற்றுமை உருபு முதலிய உருபுகள் தொக்கு நிற்க அமையும் தொடர் ஆகும்.

406. இது எத்தனை வகைப்படும்?
ஆறு வகைப்படும்.

407. அவை எவை?
வேற்றுமைத் தொகை.
வினைத் தொகை.
பண்புத் தொகை.
உவமைத் தொகை.
உம்மைத் தொகை.
அன்மொழித் தொகை.

408. வேற்றுமைத் தொகை என்றால் என்ன?
2ம் வேற்றுமை தொடக்கம் 7ம் வேற்றுமை வரையான வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்க வருவது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

409. உதாரணம் தருக?
கூலிவேலை செய்தான்.

410. 2ம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் தருக?
மரம் வெட்டினான்.
சோறு உண்டான்.

411. 3ம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் தருக?
தலை வணங்கினான்.
மண் குடம்.

412. 4ம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் தருக?
தசரதன் மகன்.
கூலிவேலை செய்தான்.

413. 5ம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் தருக?
ஊர் நீங்கினான்.
நாடு நீங்கினான்.

414. 6ம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் தருக?
சாத்தன் கை.
மணி ஓசை.

415. 7ம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் தருக?
குன்றக் குகை.
குறிஞ்சிக் குமரன்.

416. வினைத் தொகை என்றால் என்ன?
பெயரெச்சத்தின் விகுதியும் காலம் காட்டும் இடைநிலையும் மறைந்து நிற்கும் தொடர்.

417. உதாரணம் தருக?
கொல் களிறு.
விடுகணை.
சுடு சோறு.





418. மூன்று காலத்திலும் வினைத் தொகையை அமைத்துக் காட்டுக?
கொன்ற களிறு.
கொல்கின்ற களிறு.
கொல்லும் களிறு.

419. பண்புத் தொகை என்றால் என்ன?
ஆகிய என்னும் உருபு மறைந்து நிற்கும் தொடர் பண்புத் தொகை ஆகும்.

420. உதாரணம் தருக?
கரும் பலகை.
செந்தாமரை.
வட்டமேசை.

421. பண்புத் தொகையின் இன்னோர் பிரிவு எது?
இரு பெயரொட்டு பண்புத் தொகை.

422. இரு பெயரொட்டு பண்புத் தொகை என்றால் என்ன?
பொதுப் பெயரோடு சிறப்புப் பெயரும் இணைந்து பொருள் தரும் தொடர்.

423. உதாரணம் தருக?
சாரைப் பாம்பு.
நாக பாம்பு.

424. இங்கு பொதுப் பெயர் யாது?
பாம்பு.

425. இங்கு சிறப்புப் பெயர்கள் யாது?
சாரை, நாகம்.

426. உவமைத் தொகை என்றால் என்ன?
உவமை உருபுகள் தொக்கு நிற்க வருவது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

427. உதாரணம் தருக?
பவள வாய்.
மதி முகம்.

428. உவமை உருபுகள் சில தருக?
போல, புரைய, ஒப்ப, அன்ன, நிகர்ப்ப, போன்ற.

429. உம்மைத் தொகை என்றால் என்ன?
"உம்"என்னும் உருபு மறைந்து நிற்க அமையும் தொடர் உம்மைத் தொகை ஆகும்.

430. உதாரணம் தருக?
இராப்பகல்.
ஒன்றேகால்.

431. அன்மொழித் தொகை என்றால் என்ன?
வேற்றுமைத் தொகை முதலிய 5 தொகை நிலை தொடரும் தத்தம் பொருள்படும் அளவில் தொக்கு நிற்காது அவற்றுக்கு புறத்தே வேறு ஒரு சொல்லின் பொருள் பட தொக்கு நிற்பது.

432. உதாரணம் தருக?
பொற்றொடி வந்தாள்.

## வழுக்கள்

433. வழு என்றால் என்ன?
வாக்கியத்தை இலக்கணப் பிழைகளுடன் எழுதுவது வழுவாகும்.

434. இது எத்தனை வகைப்படும்?
எட்டு வகைப்படும்.





435. அவை யாவை?
திணை வழு.
பால் வழு.
எண் வழு.
இட வழு.
கால வழு.
வினா வழு.
விடை வழு.
மரபு வழு.

436. திணை வழு என்றால் என்ன?
ஓர் திணைச் சொல்லை பிறிதோர் திணையில் கூறுவது.

437. உதாரணம் தருக?
ஆடு கத்தினார்.

438. பால் வழு என்றால் என்ன?
ஒரு பாலில் ஆரம்பித்த சொல்லை பிறிதோர் பாலில் முடிப்பது.

439. உதாரணம் தருக?
கண்ணன் வந்தார்.

440. எண் வழு என்றால் என்ன?
பன்மையில் ஆரம்பித்த சொல்லை ஒருமையிலோ ஒருமையில் ஆரம்பித்த சொல்லை பன்மையிலோ முடிப்பது.

441. உதாரணம் தருக?
மரங்கள் வளர்ந்தது.

442. இட வழு என்றால் என்ன?
ஓர் இடத்தில் ஆரம்பித்த சொல்லை பிறிதோர் இடத்தில் முடிப்பது.

443. உதாரணம் தருக?
நான் வருவான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

444. கால வழு என்றால் என்ன?
ஓர் காலத்தில் ஆரம்பித்த சொல்லை பிறிதோர் காலத்தில் முடிப்பது.

445. உதாரணம் தருக?
நாளை வந்தான்.

446. வினா வழு என்றால் என்ன?
பொருள் இயைபு இல்லாமல் வினாவை வழங்குவது.

447. உதாரணம் தருக?
அட்ட திக்குகள் எட்டும் எவை?

448. விடை வழு என்றால் என்ன?
வினாவுக்கு பொருத்தமற்ற விடையைக் கூறுவது.

449. உதாரணம் தருக?
பயறு உண்டோ என வினாவியவருக்கு உழுந்து உண்டு என விடை கூறல்.

450. மரபு வழு என்றால் என்ன?
தொன்று தொட்டு வழங்கிவரும் மரபுக்கு முரணாக கூறுவது.

451. உதாரணம் தருக?
கோழிக் கன்று எனக் கூறல்.

452. வழா நிலை என்றால் என்ன?
இலக்கண விதியில் நின்று வழுவாது எழுதுதல் வழா நிலை ஆகும்.

453. வழா நிலைக்கு உதாரணம் தருக?
இலங்கையில் சமாதானம் நிலவுகின்றது.

454. வழுவமைதி என்றால் என்ன?
ஏதாவது காரணம் கருதி சான்றோர்கள் ஏற்றுக் கொண்ட வழு வழுவமைதி ஆகும்.





455. இதன் பிரிவுகள் சில தருக?
திணை வழுவமைதி.
பால் வழுவமைதி.
எண் வழுவமைதி.
இட வழுவமைதி.
கால வழுவமைதி.

456. திணை வழுவமைதி என்றால் என்ன?
உயர்வு, இழிவு, மகிழ்ச்சி, கோபம் என்பன காரணமாக திணையை மாற்றிக் கூறுதல்.

457. உதாரணம் தருக?
நாயார் வந்தார்.

458. பால் வழுவமைதி என்றால் என்ன?
இழிவு, கோபம், உயர்வு, மகிழ்ச்சி காரணமாக ஓர் பாலை பிறிதோர் பாலில் கூறுவது.

459. உதாரணம் தருக?
மகனை இராசாத்தி எனக் கூறுதல்.

460. எண் வழுவமைதி என்றால் என்ன?
ஒருமைப்பாலில் பன்மைச் சொல்லையும் பன்மைப்பாலில் ஒருமைச் சொல்லையும் கொண்டு முடித்தல்.

461. உதாரணம் தருக?
இரண்டு கண்ணுஞ் சிவந்தது.

462. இட வழுவமைதி என்றால் என்ன?
ஓர் இடத்துச் சொல் பிற இடத்துச் சொல்லுடன் மயங்கி வருவது.

463. உதாரணம் தருக?
தங்கள் வரவு நல்வரவு ஆகுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

464. கால வழுவமைதி என்றால் என்ன?
விரைவு, மிகுதி, தெளிவு காரணமாக ஓர் காலத்துக்குரியதை வேறோர் காலத்தில் கூறுவது.

465. உதாரணம் தருக?
இன்னும் வராதிருப்பவன் இதோ வந்து விட்டேன் எனக் கூறுதல்.

466. இரட்டைக்கிளவி என்றால் என்ன?
ஒரே சொல் இருமுறை அடுக்கப்பட்டு வருவதும் பிரித்தால் பொருள் தராததும் இரட்டைக்கிளவியாகும்.

467. உதாரணம் தருக?
சலசல.
தகதக.

468. இரட்டைக்கிளவியின் மறு பெயர் என்ன?
இரட்டை மொழி.

469. இணை மொழி என்றால் என்ன?
ஓசை நயமும் பொருட் செறிவும் உடையதாக இணைந்து வரும் சொல் இணை மொழியாகும்.

470. உதாரணம் தருக?
அகடவிகடம்.
அக்கம்பக்கம்.

471. அடுக்கிடுக்குத் தொடர் என்றால் என்ன?
அடுக்குத் தொடரின் முன் சொல் விகாரப்பட்டு வருவது.

472. உதாரணம் தருக?
பென்னம் பெரிய.
சின்னம் சிறிய.





## அணிகள்

473. அணிகள் என்றால் என்ன?
மொழியிலே எடுத்த பொருளை அழகாகவும் பொருள் வலிமையுடனும் கூற உதவுவது அணியாகும்.

474. அணிகள் எத்தனை வகைப்படும்?
இரண்டு வகைப்படும்.

475. அவை எவை?
சொல்லணி.
பொருளணி.

476. சொல்லணி என்றால் என்ன?
சொல்லும் எழுத்தும் பற்றி வருவது சொல்லணி எனப்படும்.

477. சொல்லணிகள் சில தருக?
மோனை.
எதுகை.
பின்வருநிலை.
மடக்கு.
சிலேடை.

478. மோனை என்றால் என்ன?
செய்யுள் சீர்களில் முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனை ஆகும்.

479. உதாரணம் தருக?
கல்லோடு கல்லாய் கணிக்காது நோக்குகின்றார்.

480. எதுகை என்றால் என்ன?
செய்யுள் சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

481. உதாரணம் தருக?
ஆலமுண்ட நீலகண்டன்.

482. பின்வருநிலை அணி என்றால் என்ன?
முன்வந்த சொல்லும் பொருளும் தனித்தனியகவோ சேர்ந்தோ பின்னால் வருவது பின்வரு நிலையாகும்.

483. உதாரணம் தருக?
வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் நின் புறுவர்.

484. மடக்கு என்றால் என்ன?
சொல்லேனும் சீரேனும் மீண்டும் மீண்டும் வருவது மடக்கு ஆகும்.

485. உதாரணம் தருக?
ஓடுமா தங்கமே உருளுமாதங்கமே.

486. சிலேடை என்றால் என்ன?
சொல்லோ சொற்றொடரோ பல பொருள்பட அமைவது சிசேடை ஆகும்.

487. உதாரணம் தருக?
காசா லேசா.

488. பொருளணி என்றால் என்ன?
பொருள் பற்றி அமைவது.

489. பொருளணிகள் சில தருக?
உவமை அணி.
உருவக அணி.
தற்குறிப் பேற்ற அணி.
உயர்வு நவிர்ச்சி அணி.
வேற்றுமை அணி.





490. உவமை அணி என்றால் என்ன?
அறிந்ததைக் கொண்டு அறியாததை விளக்குதல்.

491. உதாரணம் தருக?
மேகம் அன்ன கூந்தலாள்.

492. உவமை அணியின் உறுப்புக்கள் எவை?
உவமானம்.
உவமேயம்.
பொதுத் தன்மை.
உவமை உருபு.

493. உவமானம் என்றால் என்ன?
நன்கு தெரிந்த பொருள் உவமானம் ஆகும். (மேகம்)

494. உவமேயம் என்றால் என்ன?
எம்மால் தெரியப்படுத்தப்படும் பொருள் உவமேயம் ஆகும். (கூந்தல்)

495. பொதுத் தன்மை என்றால் என்ன?
இரு பொருளிலும் உள்ள ஒத்த தன்மை. (கருமை நிறம்)

496. உவமை உருபு என்றால் என்ன?
உவமை அணியில் வந்துள்ள உருபு. (அன்ன)

497. உருவக அணி என்றால் என்ன?
எடுத்துக் கொண்ட பொருளை உவமானத்தின் மூலம் உருவகித்து கூறுவது உருவக அணியாகும்.

498. உதாரணம் தருக?
வதனமதி.

499. தற்குறிப் பேற்ற அணி என்றால் என்ன?
இயற்கையாக நிகழும் நிகழ்வில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப புலவன் தன்குறிப்பை ஏற்றிக் கூறல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

500. உதாரணம் தருக?
தமயந்தியின் துயரத்திற்காகவே சேவல் கூவியதாக நளவெண்பாவில் புகழேந்திப்புலவர் காட்டல்.

501. உயர்வு நவிர்ச்சி அணி என்றால் என்ன?
ஒரு பொருள் பற்றி மிகுதியான தன்மையைக் கூறுவது உயர்வு நவிர்ச்சியணியாகும்.

502. உதாரணம் தருக?
செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்.

503. வேற்றுமை அணி என்றால் என்ன?
ஒப்பீட்டு முறையிலே இரு பொருட்களை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி ஆகும்.

504. உதாரணம் தருக?
கற்றிந்தார் கேண்மை நுனியிற் கரும்பு தின்றற்றே.

505.

## நிறுத்தற் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| முற்றுப்புள்ளி / முடிப்பிசைக்குறி | ---------- | (.) |
| காற்புள்ளி / உறுப்பிசைக்குறி | ---------- | (,) |
| அரைப்புள்ளி / தொடரிசைக்குறி | ---------- | (;) |
| முக்காற்புள்ளி / விளக்கிசைக்குறி | ---------- | (:) |
| வினாக்குறி / வினாவிசைக்குறி | ---------- | (?) |
| மெய்ப்பாட்டுக்குறி / வியப்புக்குறி | ---------- | (!) |
| மேற்கோட்குறி / அனுவாதக்குறி | ---------- | ("......") |
| அடைப்புக்குறி | ---------- | (.........) |
| தனிநிலைத் தொடர்குறி | ---------- | (- ......) |



# உசாத்துணை நூல்கள்

- நன்நூல் காண்டிகை உரை - ஆறுமுக நாவலர்.
- இலக்கணச் சுருக்கம் - ஆறுமுக நாவலர்.
- அடிப்படைத் தமிழ் இலக்கணம் - எம். ஏ. நுஃமான்
- தமிழ் மொழி இலக்கண இயல்புகள் - பேராசிரியர் அ.சண்முகதாஸ்.
- செந்தமிழ் இலக்கண விளக்கம் - பண்டிதர் க. நாகலிங்கம்.
- தரம் 6தொடக்கம் 11வரையான தமிழ் மொழி - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. நடராசா [illegible]

778676639

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமொழி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org